விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 23
ஒலி 152 வள்ளுவர் ஆண்டு 2053 வைகாசி 06 வெள்ளிக்கிழமை (20.05.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=


# கோட்டா - ரணில் சூழ்ச்சி அரசை விரட்டுவோம்

## அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டம்
## பொலிஸார் கண்ணீர்ப்புகை, நீர்த்தாரைப் பிரயோகம்




(15 ஆம் பக்கம் பார்க்க)

## 20 ரூபாயால் பாணின் விலை அதிகரிப்பு



(யாழ்ப்பாணம்)
யாழ். மாவட்டத்தில் நள்ளிரவு முதல் பாணின் விலை 20 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளது டன் பணிஸ் வகைகளின் விலையில் மாற் றமில்லை என 15

## நேற்றுமுதல் பாடசாலைகளுக்கு தவணை விடுமுறை

(கொழும்பு)
அரச பாடசாலைகளுக் கும் நேற்று தொடக்கம் முதலாம் தவணை விடு முறைவழங்குவதாக கல்வி அமைச்சு அறிவித்துள் ளது.
அரச மற்றும் அரச அனு மதி பெற்ற தனியார் பாடசா லைகளின் இந்த ஆண் டுக்கான முத லாம் தவணை 15

## புலோலி-கச்சாய் வீதியில் மோ.சைக்கிள் விபத்து

### குடும்பஸ்தர் உயிரிழப்பு



(யாழ்ப்பாணம்)
வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக் கிள் ஒன்று மின் கம்பத்தில் மோதி விபத்துக்குள் ளானதில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். 15

## கடுமையான எரிபொருள் தட்டுப்பாடு

# அத்தியாவசியமற்ற அரச பணியாளர்கள்

### இன்று கடமைக்கு வரத்தேவையில்லை - ரணில்



(கொழும்பு)
கடுமையான எரிபொருள் தட்டுப்பாடு நிலவுவதன் காரணமாக அத்தியாவசியமற்ற அரச பணியாளர்கள் கடமைக்கு வரத்தேவையில்லை என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## யாழில் எரிபொருளுக்காக நீண்டவரிசையில் பொதுமக்கள்



(15 ஆம் பக்கம் பார்க்க)

## பாண்டியன்குளத்தில் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(முல்லைத்தீவு)
முல்லைத்தீவு மாவட்டம் மாந்தை கிழக்கு பிரதேசத் திற்குட்பட்ட பாண்டியன்குளம் பகுதியில் குடும்பஸ் தர் ஒருவர் நேற்று 15

## யுத்தத்தில் உயிரிழந்த புலிகளுக்கும் மரியாதை செலுத்த வேண்டும்

### பாராளுமன்றில் டிலான் பெரேரா



(கொழும்பு)
போரில் இறந்த படையினரு க்கு மரியாதை செலுத்துகின்ற அதேநேரம், தமிழீழ விடுத லைப் புலிகள் இயக்கத்தில் இணைந்து மரணித்த இளைஞர்களுக்கும் மரியாதை செலுத்த வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரி 15

## குற்றப்புலனாய்வில் பவித்ரா வாக்குமூலம்

(கொழும்பு)
பாராளுமன்ற உறுப்பின ரான பவித்ரா வன்னியாரச்சி மற்றும் அவரது கணவரான காஞ்சன கருணா ரத்ன ஆகியோர் குற் 15

## தேவைக்கு அதிகமாக பெற்றுக்கொண்ட போதிலும் யாழில் மண்ணெண்ணெய் பற்றாக்குறை அதிகளவில் காணப்படுகின்றது

### அரசாங்க அதிபர் க. மகேசன்

(யாழ்ப்பாணம்)
தற்போது உள்ள பொருளா தார நெருக்கடி நிலையில் யாழ்ப் பாண மாவட்டத்திற்கு தேவை யான மண்ணெண்ணையின் அளவைவிட அதிகளவு மண் ணெண்ணெய் கொழும்பிலி ருந்து தருவிக்கப்படுகின்ற போதி லும் யாழ்ப்பாண மாவட்டத்தில் மண்ணெண்ணெய் பற்றாகுறை தட்டுப்பாடு காணப்படு வதாக யாழ்ப்பாண 15

## லிட்ரோ அதிகாரிகளை சபைக்கு அழைத்து விசாரணை செய்க

### ரணில் பணிப்புரை

(கொழும்பு)
லிட்ரோ எரிவாயு நிறுவன அதிகாரிகளை பாராளுமன்றுக்கு அழைத்து விசாரணை மேற் கொள்ளப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிர 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்த அரசியலில் இருந்து ஓய்வுபெற்றிருக்க வேண்டும்



## பாராளுமன்றில் சமல் ராஜபக்ஷ

(கொழும்பு)

**மகிந்த ராஜபக்ஷ அரசியலில் இருந்து ஓய்வுபெற்றிருக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினரும் மகிந்தவின் சகோதரருமான சமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

பாராளுமன்றில் நேற்று உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, தமது இரண்டு தவணை ஜனாதிபதி பதவிக் காலத்தின் பின்னர் அரசியலில் இருந்து ஓய்வுபெற்றிருக்க வேண்டும்?

இதுவே சிறந்த செயற்பாடாக இருந்திருக்கும். இன்றைய பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது.

இன்று அவர் 50 வருட அரசியல் வாழ்க்கையில் செய்த அர்ப்பணிப்புக்கள் எல்லாமே இல்லாமல் போயுள்ளன.

எனவே அரசியலில் பத வியை ஏற்றுக்கொள்கின்ற அதே நேரம் விட்டுக்கொடுக்கவும் பழக வேண்டும் என்று சமல் ராஜ பக்ஷ தெரிவித்தார்.

இதற்கிடையில் ஒரு பாராளுமன்ற உறுப்பினராக இருந்து கொண்டு பிரதமராக பதவியேற் றுள்ள ரணில் விக்கிரமசிங்க மிகவும் ராசியானவர் என்றும் சமல் ராஜபக்ஷ குறிப்பிட்டார். (ம-7)


# கண்ணீர் அஞ்சலி

## வயித்திலிங்கம் பேரின்பநாயகம்

(ஓய்வுபெற்ற காசாளர் - சுன்னாகம் ப.நோ.கூ. சங்கம், தலைவர் - அகில இலங்கை திருமுறை மன்றம், முன்னாள் சைவ பரிபாலன சபை நிர்வாக உறுப்பினர்)



அவர்கள் காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயுர் அடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தோற்றம் 22.02.1943 மறைவு 17.05.2022

தயா அச்சகம்
தயா வெளியீடு

வி. தயாபரன் குடும்பம்
(பொருளாளர் - சைவ பரிபாலன சபை)

(11445)



உ
சிவமயம்

# பேரின்பம் தாளடைந்து பேரின்பம் காண்பீர்



அகில இலங்கைத் திருமுறை மன்றத்தின் தலைவர் **பேரின்பநாயகம்** மண்ணைவிட்டு மறைந்தார் என்ற செய்தி கேட்டு பெரும் கவலையடைந்தோம். பொன்னம்பலவானர், கிருஷ்ணமூர்த்தி, பேரின்பநாயகம் என்ற மும்மூர்த்திகளும் இணைந்தே அகில இலங்கைத் திருமுறை மன்றத்தை ஆரம்பித்ததும் வளர்த்ததும் யாவரும் அறிவர்.

சைவத்தின் வளர்ச்சிக்கு சாத்திர அறிவும் தோத்திர அறிவும் மிக முக்கியமானதாகும். இரண்டிலும் பாண்டித்தியம் பெற்றவர் பண்டிதர். இவர்களின் பணி மெச்சி திருவாவடுதுறை ஆதீனம் நால்வர் விக்கிரகத்தை (சிலையை) உபசரித்து அவ் விக்கிரகத்தை இலங்கையின் பல பாகங்களுக்கும் எடுத்துச் சென்று ஆங்காங்குள்ள ஆலயங்கள், ஆதீனங்கள், மடங்கள் தோறும் வைத்து பன்னிரண்டு திருமுறைகளும் அகத்தியர் தேவாரத் திரட்டையும் ஓதுவதன் மூலம் எமது சமயத்திற்கு பேரெழுச்சியை ஏற்படுத்தினார். இவரோடு இறந்த அமரர் பொன்னம் பலவானர் (மூளாய் பிள்ளையார் ஆலயம்) அவர்களினதும் கிருஷ்ணமூர்த்தி அவர்களினதும் பணிகளும் இந்நேரத்தில் நினைவு கூரத்தக்கதாகும்.

நூலைப் பார்க்காமலே திருவாதவூரடிகள் புராணம், பெரிய புராணம், கந்த புராணம், திருமுருகாற்றுப்படை போன்றவற்றுக்கு பயன் சொல்ல வல்லவர். இவர் இழப்பு சைவ உலகுக்கும் பேரிழப்பாகும். இவர்களின் ஆத்மா தில்லைக்கூத்தன் திருவடியில் ஆறுதல்பெற நாம் பிரார்த்திப்போம்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

அவர்களின் வழியில் திருமுறைகள் ஓதுவோம்.

**க.கு.க.சிவபாலன்**
*அகில இலங்கை திருமுறை மன்றப் பொருளாளர்,*
*மாணிக்கவாசகர் மடாலய போசகர்*

(C-4344)


# கோப்பாயில் அதிகாலை கத்தி முனையில் கொள்ளை

## நேற்று மட்டும் 7 பேரிடம் பணம், தொலைபேசி அபகரிப்பு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பகுதியில் அதிகாலையில் தொடர்ச்சியாக இடம்பெறும் வழிப்பறிக் கொள்ளையால் இலங்கை போக்குவரத்துச் சபையின் கோண்டாவில் சாலை ஊழியர்கள் உட்பட பலர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் இந்த வழிப்பறிக் கும்பலின் அட்டூழியம் தொடர்பில் கோப்பாய் பொலிஸாரின் அசமந்தப்போக்கினால் நேற்று மட்டும் 7 பேரிடம்பணம்மற்றும்தொலைபேசி என்பன கத்திமுனையில் அபகரிக்கப்பட்டுள்ளன.

நேற்று அதிகாலை 4 மணிக்கு இடையில் இலங்கை போக்குவரத்துச் சபையின் 6 ஊழியர்கள் மற்றும் பத்திரிகை விநியோகம் செய்பவர் என 7 பேரிடம் 70 ஆயிரம் ரூபாய்க்கு மேற்பட்ட பணம் மற்றும் பல லட்சம் பெறுமதியான தொலைபேசிகள் அபகரிக்கப்பட்டுள்ளன.

கோப்பாய் பகுதியில் உள்ள கோழிப் பண்ணை முன்பாக முகமூடித் தொப்பி அணிந்து கொண்டு கத்திகளுடன் நின்ற நான்கு பேர் கொண்ட கும்பல் இந்த துணிகரக் கொள்ளையில் ஈடுபட்டுள்ளது.

அவர்கள் வீதியினால் பயணிப்போரை வழிமறித்து பொலிஸார் எனத் தெரிவித்து அடையாள அட்டையை காண்பிக்குமாறு கேட்டுவிட்டு கத்தியை கழுத்தில் வைத்து அச்சுறுத்தி வழிப்பறியில் ஈடுபட்டதாக பாதிக்கப்பட்ட இ.போ.ச. ஊழியர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்தச் சம்பவங்கள் அண்மைய நாட்களில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் நிலையில் கோப்பாய் பொலிஸாரின் அசமந்த போக்கினால் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ம-7,33)

# நாட்டில் மேலும் 15 பேருக்கு கொரோனா

(கொழும்பு)

கொரோனா தொற்று உறுதியான மேலும் 15 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 663,720ஆக அதிகரித்துள்ளது. (ம-7)

# மாந்தை கிழக்கில் சட்ட விரோத மணல் அகழ்வு

## இருவர் கைது

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டம் மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட பறங்கியாற்றில் அனுமதிப்பத்திர விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் மணல் அகழ்வில் ஈடுபட்ட, இரு உழவு இயந்திரங்களுடன் அதன் சாரதிகள் இருவரும் நட்டாங்கண்டல் பொலிஸாரினால் நேற்று மாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

விசேட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதோடு இரு உழவு இயந்திரங்களை பொலிஸார் கைப்பற்றினர்.

உழவுஇயந்திரங்கள் இரண்டும் நட்டாங்கண்டல் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன், சாரதிகள் இருவரையும் பொலிஸ் பிணையில் செல்ல அனுமதித்த பொலிஸார், எதிர்வரும் 25 ஆம் திகதி குறித்த வழக்கை மாங்குளம் நீதவான் நீதிமன்றில் பாரப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-7,281)


# சொர்க்கம் திருமண சேவை

- அவுஸ்திரேலியாவில் M.Sc முடித்த என்ஜினியர், 34 வயதுள்ள அனுசம் நட்சத்திர மணமகனுக்கு கனடா அல்லது அவுஸ்திரேலியாவில் மணமகள் தேவை.
- ஜேர்மனியில் வசிக்கும் RC வேத மணமகனுக்கு (31 வயது) ஜேர்மனியில் மணமகள் வேண்டும்.
- 24 வயதுள்ள அழகான யாழ்ப்பாண மணமகளுக்கு உத்திராடம் நட்சத்திரப் பொருத்தமான மணமகன் தேவை.

(11442)

**077 200 0230**
**001416661855**

# தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் தனியார் நிறுவனத்தில் பணிபுரிவதற்கு பெண் ஊழியர்கள் தேவை.

(11441)

**077 964 5877**

# வீடு வாடகைக்கு

கல்வியங்காடு சந்தைக்கு அருகாமையில் செல்லர் வீதியில் வீடு வாடகைக்கு உண்டு.

(11439)

**077 650 8376**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் பொருளாதாரப் பேரழிவு

# அடுத்து வரும் நாட்கள் மிக மோசமானவை

## அமெரிக்க பொருளாதார நிபுணர் எச்சரிக்கை

**(கொழும்பு)**

**இலங்கையின் தற்போதைய நிலவரப்படி நாடு வங்குரோத்து நிலையை அடைந்துள்ளது. எனவே அடுத்து வரும் நாட்கள் மிகவும் மோசமானதாக இருக்கும் என அமெரிக்க பொருளாதார நிபுணரான பேராசிரியர் ஸ்டீவ் ஹென்கே எச்சரித்துள்ளார்.**

ஜோன்ஸ் ஹொப்கின்ஸ் பல்கலைக்கழகத்தின் பொருளாதாரப் பேராசிரியரான ஹென்கே இலங்கை ஊடகமொன்றிற்கு கருத்து வெளியிடும் போதே இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் தொடர்ந்தும் அவர் தெரிவிக்கையில்,

இலங்கையில் உயர் பணவீக்கத்தினால் நாட்டு மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் நாட்டில் அறிவிக்கப்பட்டுள்ள பணவீக்கம் 21.5 சதவீதம் என்ற போதிலும், அவரது அளவீடுகளின்படி உண்மையான பணவீக்கம் 132 சதவீதம் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். அதற்மைய, அதிகாரபூர்வ பணவீக்க விகிதத்தை விட உண்மையான பணவீக்க விகிதம் 6 மடங்கு அதிகமாக உள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இத்தகைய உயர் பணவீக்கம் ஒரு பொருளாதாரப் பேரழிவு எனவும் இதனால் பணக்காரர்களை விட ஏழைகள் அதிகம் பாதிக்கப்படுவது தான் இங்கு உண்மையான பிரச்சினை எனவும் பேராசிரியர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் இறுதியில் அரசியல் பிரச்சினையே உருவாகும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-6)

## தேசிய சுகாதார சேவைகளை

# தனியார் மயமாக்கும் திட்டத்திற்கு எதிர்ப்பு

### எதிர்வரும் 25 ஆம் திகதி தொழிற்சங்க போராட்டம் முன்னெடுப்பு

(கொழும்பு)

சுகாதாரத்துறை ஊழியர்களுக்கான சம்பளக் குறைப்பை நடைமுறைப்படுத்தும் அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில்,

எதிர்வரும் 25 ஆம் திகதி தொழிற்சங்கப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.

தேசிய சுகாதார சேவைகளை தனியார் மயமாக்கும் அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்றும் அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது.

பிரதமர் மற்றும் நிதி அமைச்சின் செயலாளர்கள் மற்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஆகியோருடன் கலந்துரையாடலுக்கு அழைப்பு விடுத்துள்ள அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம், பிரச்சினைகளை தீர்க்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை வலியுறுத்தியுள்ளது.

தமது கோரிக்கைகளுக்கு அதிகாரிகள் சாதகமான பதிலை வழங்கத் தவறினால், எதிர்வரும் மே 25 ஆம் திகதி சுகாதாரத் துறையின் ஏனைய ஊழியர்களுடன் இணைந்து தமது தொழிற்சங்கப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது. (நி-6)

# இலங்கையில் நடந்தது இனப்படுகொலையே

### அங்கீகரித்தது கனடா பாராளுமன்றம்

(ஒட்டாவா)

இலங்கைத்தீவில் தமிழர்களுக்கு நிகழ்ந்தது இனப்படுகொலை என கனேடிய பாராளுமன்றம் ஏகமனதாக ஏற்றுக் கொண்டது.

அத்துடன், ஒவ்வொரு ஆண்டும் மே-18 ஆம் திகதியை தமிழ் இனப்படுகொலை நினைவேந்தல் நாளாக ஏற்று கனடா பாராளுமன்றம் அங்கீகரித்தது.

இதன் மூலம் இலங்கையில் இடம்பெற்ற தமிழ் இனப்படுகொலையை ஏற்று அங்கீகரித்த உலகின் முதல் பாராளுமன்றமாக கனடா பாராளுமன்றம் அமைந்துள்ளது. (நி-6)

# எரிவாயு தாங்கிய கப்பல் நாட்டை வந்தடைந்தது

(கொழும்பு)

எரிவாயு தாங்கிய கப்பல் ஒன்று நேற்று நாட்டை வந்தடைந்துள்ளதாக லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதன்படி, குறித்த கப்பலில் சுமார் 3,800 மெட்ரிக் தொன் எரிவாயு கொண்டு வரப்பட்டுள்ளதாக அந்நிறுவனம் தெரிவித்துள்ளது. (நி-6)

# புதிய அமைச்சர்களுக்கு சம்பளம் வழங்கப்படமாட்டாது

### சிறப்புரிமைகளும் குறைக்கப்படும் என்கிறார் பிரதமர்



(கொழும்பு)

புதிய அமைச்சரவை அமைச்சர்களுக்கு சம்பளம் வழங்கப்பட மாட்டாது என பிரதமர் தெரிவித்துள்ளார்.

நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற பாராளுமன்ற அமர்வின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

புதிதாக அமைச்சர்கள் நியமிக்கப்படும்போது, அவர்களுக்கு அமைச்சர்களுக்குரிய சம்பளம் வழங்கப்படமாட்டாது என்பதுடன், சில சிறப்புரிமைகளும் குறைக்கப்படும் என பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

அது தொடர்பான அறிவிப்புகள் விரைவில் வெளியிடப்படுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் அலுவலக செலவுகளை பாதியாக குறைக்க பிரதமர் முடிவு செய்துள்ளதாக முன்ன தாக செய்திகள் வெளியாகின என்பது குறிப்பிடத்தக்கது. (நி-6)


கண்ணீர் அஞ்சலி

அமரர்.பண்டிதர் வ.பேரின்பநாயகம்



பண்டிதர் பேரின்பநாயகம் அவர்கள்
இறைபதம் அடைந்த செய்தியறிந்து
ஆற்றேனாத் துயரமடைகிறோம்.
யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின்
நிர்வாக சபை உறுப்பினராக இருந்து
பல வழிகளிலும் சபைக்கு பணியாற்றியவர்.
அன்னாரை இழந்து துயரடைந்துள்ள
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
இரங்கல்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்தனை செய்கிறோம்...

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(f-4342)

இல 66, கல்லூரி வீதி,நீராவியடி, யாழ்ப்பாணம்.

செயலாளர் சைவபரிபாலனசபை.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கே.சி.சி.சி. வெற்றிக் கிண்ணம்

## T.YMHA 2 ஆவது சுற்றுக்கு தகுதி

கே.சி.சி.சி விளையாட்டுக்கழகம் வருடாவருடம் 29 ஆவது ஆண்டுகளாக நடத்தி வரும் 30 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடரின் முதலாவது சுற்றில் இரண்டாவது போட்டி கடந்த 3 ஆம் திகதி நடைபெற்றது.

போட்டியில் T.YMHA அணி, டிறிபேக் ஸ்ரார் அணியை 88 ஓட்டங்களால் வெற்றி பெற்று 2 ஆவது சுற்றுக்குத் தகுதி பெற்றது. நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற டிறிபேக் ஸ்ரார் அணி களத்தடுப்பை தெரிவு செய்ததன் மூலம் T.YMHA அணியினர் துடுப்பாட்டத்தினை மேற்கொண்டபோது 30 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 247 ஓட்டங்களைப் பெற்றனர்.

கோபிநாத் - 17, யதுர்ஸன் - 25, கிருஷாந்தன் - 75, மகிதனன் - 53, அஜன்தன் ஆட்டமிழக்காது 14 ஓட்டங்களைப் பெற்றனர்.

களத்தடுப்பில் டிறிபேக் ஸ்ரார் அணியைச் சார்ந்த சுகன்தன், தினுஸன், சுஜிகனன் தலா 2 விக்கெட்டுக்களையும் தர்ஸன் - 1 விக்கெட்டினை யும் கைப்பற்றினர். 248 ஓட்டங்களை வெற்றி இலக்காக் கொண்டு களமிறங்கிய டிறிபேக் ஸ்ரார் அணியினர் 22.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 159 ஓட்டங்களைப் பெற்றனர். கோபி நாத் - 19, சாகித்தியன் - 12, நிதர்ஸன் - 40, பார்த்தீபன்- 11, தர்ஸன் - 15, சுகந்தன் - 17, தினுஸன் ஆட்டமிழக்காது 15 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்து வீச்சில் T.YMHA அணி சார்பாக கீரன் - 4, சிவசங்கர் - 3, அஜன்தன் - 1, விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். தரவரிசைப் பட்டியலுக்கு இப்போட்டியின் மூலம் T.YMHA அணி 7.35 புள்ளிகளையும், டிறிபேக் ஸ்ரார் அணி 2.29 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டனர். (4-6)

# பெண்களுக்கான கரப்பந்தாட்ட போட்டி உரும்பிராய் இந்துக்கல்லூரி சம்பியன்



யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான 20 வயதிற்குட்பட்ட பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் உரும்பிராய் இந்துக் கல்லூரி அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

இதன் இறுதியாட்டம் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

இறுதியாட்டத்தில் உரும்பிராய் இந்துக்கல்லூரி அணியை எதிர்த்து புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி அணி மோதியது.

இதில் உரும்பிராய் இந்துக் கல்லூரி அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தை தமதாக்கிக் கொண்டனர்.

3 ஆம் இடத்தை முத்துத்தம்பி வித்தியாலய அணி பெற்றுக்கொண்டது. (4-6-90)

# டி கொக் அதிரடி; லக்னொவ் வெற்றி

ஐ.பி.எல். இருபது-20 தொடரின் 66 ஆவது லீக் போட்டியில், லக்னொவ்சுப்பர்ஜியண்ட்ஸ் அணி 2 ஓட்டங்கள் வித்தியாசத்தில் திரில் வெற்றியை பதிவுசெய்தது.

மும்பையில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில், லக்னொவ் சுப்பர் ஜியண்ட்ஸ் அணியும் கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணியும் பலப்பரீட்சை நடத்தின.

இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற லக்னொவ் சுப்பர் ஜியண்ட்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. இதன்படி, முதலில் துடுப்பெடுத்தாடிய லக்னொவ் சுப்பர் ஜியண்ட்ஸ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் விக்கெட் இழப்பின்றி 210 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. இதன்போது லக்னொவ் சுப்பர் ஜியண்ட்ஸ் அணி சார்பில், குயிண்டன் டி கொக் ஆட்டமிழக்காது 140 ஓட்ட ங்களையும் கே.எல். ராகுல் ஆட்டமிழக்காது 68 ஓட்ட ங்களையும் பெற்றுக் கொண் டனர். இதனைத் தொடர்ந்து 211 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணியால், 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 208 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது. இதனால், லக்னொவ் சுப்பர் ஜியண்ட்ஸ்அணி 2 ஓட்டங்கள் வித்தியா சத்தில் திரில் வெற்றியை பதிவு செய்தது. (4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2619

நதீஸ்




வைதேஷ்




றியாத்




யுவதர்ஸி




தாருஸா




சரசுதா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்து வரும் வாரங்களில் எரிபொருள் இன்றி நாடு முடங்கும்

## பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஒருங்கிணைப்பாளர்

(கொழும்பு)

மே மாத இறுதிக்குள் எரிபொருளின்றி நாடு முடங்கும் என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தொழிற்சங்க கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் ஆனந்த பாலித தெரிவித்துள்ளார்.

இணைய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் தற்போது விநியோகிக்கப்படும் எரிபொருளானது தரமற்றது என்றும் ஐஓசி நிறுவனம் எரிபொருள் தர ஆய்வுகளை நடத்தவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

நாடு முழுவதும் ஏற்பட்டுள்ள கடுமையான பெற்றோல் தட்டுப்பாடு நெருக்கடி நிலையை எட்டியுள்ளதுடன், பல பகுதிகளில் எரிபொருள் பற்றாக்குறையால் பல வாகனங்கள் ஸ்தம்பித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (நி-6)

# எரிவாயு தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய 45 நாட்கள் தேவை

## லிட்ரோ நிறுவனம் அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் தற்போது நிலவும் எரிவாயு தட்டுப்பாடு நிலைமையை சமாளிக்க இன்னும் ஒன்றரை மாதம் செலவிடப்படும் என லிட்ரோ காஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

தேவையைப் பூர்த்தி செய்வதற்காக ஒரு நாளைக்கு 30,000 உள்நாட்டு எரிவாயு சிலிண்டர்களை வெளியிட ஆலோசித்து வருவதாக நிறுவனத்தினர் தெரிவித்தனர்.

மோசமான வானிலை காரணமாக சரக்குக் கப்பலில் இருந்து எரிவாயுவை இன்னும் இறக்க முடியவில்லை என்றும் எரிவாயு விநியோகம் தாமதமாகும் என்பதால், மக்கள் வரிசையில் நிற்பதை தவிர்க்குமாறு அந்த நிறுவனம் அறிவுறுத்தியுள்ளது. (நி-6)


நீங்கா நினைவுகளுடன்

1ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர். திரு.

சுப்பையா சிவபாதலிங்கம் (ராசா)

மண்ணுலகில் 02.07.1952

விண்ணுலகில் 16.05.2021

மென்மையான புன்சிரிப்பும், சாந்தமான முகமும், சந்தனப் பொட்டும், சத்தமில்லா உன் பேச்சும் சடுதியில் மறைந்ததுவோ! தாங்கிடுமோ எம் உள்ளம் உன்னை விரும்பாதார் யாருண்டு இவ் உலகில் உள்ளம் தான் வேகுதையா உன் பிரிவு தாங்காது தவிக்கின்றோம்.

உன் ஆத்மா சாந்தியடைய ரொர்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(11422)

தகவல்:
அண்ணன் சு.சுந்தரலிங்கம்
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.
077 931 9434



நீங்கா நினைவுகளுடன்

8ம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர். சுந்தரலிங்கம் ராஜேஸ்வரி (ராசாத்தி)



மண்ணுலகம் 20.06.1948

விண்ணுலகம் 10.12.2014

வாழும் காலமெல்லாம்
வளம் தந்து வழிகாட்டி
வையத்துள் வாழ்வாங்கு
வாழ்ந்து இன்று
வானுறையும் தெய்வத்துள்
இணைந்திட்ட எங்கள்
குடும்ப குலவிளக்கு
உன் பிரிவு தாங்காது
தவிக்கின்றோம்.

உன் ஆத்மா சாந்தியடைய ரொர்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(11423)

தகவல்:
கணவன் சு.சுந்தரலிங்கம்
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.
077 931 9434


# இராசிபலன்

20.05.2022
வைகாசி 06, வெள்ளிக்கிழமை
பஞ்சமி முன்னிரவு 10.41 மணிவரை

பூராடம் முற்பகல் 7.52 மணிவரை
சுபநேரம் 5.52-7.22 மணிவரை
இராகுகாலம் 10.22-11.52 மணிவரை

சந்திராஷ்டமம் - மிருகசீரிடம்

வளவன்

**மேஷம்** மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், கனவு பலிதமுண்டு, வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**கடகம்** வராத உறவினர்கள் திடீரென வீடுகளுக்கு வரலாம், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், காரிய அனுகூலமுண்டு, நண்பர்கள் சந்திப்புண்டு.

**துலாம்** ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், நம்பி வந்தவர்களுக்கு நன்மைகள் செய்து மகிழ்வீர்கள், ஆன்மிகச்சிந்தனை மேலோங்கும் நாள்.

**மகரம்** வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள், தொழில் ரிதியான பயணங்கள் கைகூடும், பெரியோர்களின் உதவியால் சில நன்மைகள் இடம்பெறலாம்.

**ரிஷபம்** மனக்குழப்பம் அகன்று மதிப்பும் மரியாதையும் உயரும், அலைச்சல்கள் குறைந்து ஆதாயம் பெறுவீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.

**சிம்மம்** நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காணும் நாள், இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**விருச்சிகம்** செய்தொழிலில் முன்னேற்றம் காணும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், நண்பர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும்.

**கும்பம்** சிறிய வேலையொன்றிற்காக சற்று அலைய நேரிடலாம், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், சயன சுகக்குறைவுகள் ஏற்படலாம், மனச் சஞ்சலங்கள் சற்று அதிகரிக்கும்.

**மிதுனம்** சில பிரச்சினைகளைக் கண்டும் காணமலும் இருப்பது நல்லது, ஆரோக்கியத்தில் கவனம் எடுக்க வேண்டிய நாள், வீண் விரயங்கள் ஏற்படலாம்.

**கன்னி** உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், பிள்ளைகள் வழியில் பெருமையான சம்பவங்கள் இடம்பெறலாம், அரச வழியில் அனுகூலமுண்டு, சுபசெய்திகள் வந்து சேரலாம்.


**தனுசு** நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், வாக்கு மேன்மையுண்டு, தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும்.

**மீனம்** அரச தொடர்பான காரியங்கள் அனுகூலமாக முடியலாம், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள், புதிய பொருட்களை வாங்க முற்படுவீர்கள்.

வணங்குபவன் வாழ்வான் நிந்திப்பவன் அழிவான்.

Digitized by Noolaham Foundation
noolaham.org

# வவுனியாவில் அதிகளவாக விற்பனையாகும் இளநீர்



(நெளுக்குளம்)

தற்போது அதிக வெப்பமான காலநிலை நிலவுவதால் பொது மக்கள் இளநீரை பருகுவதில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

அந்த வகையில் தற்போது வவுனியாவில் இளநீர் விற்பனை அதிகரித்துள்ளதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். செயற்கைக் குளிர்பானங்கள் பணத்தை மட்டுமல்ல உடல்நலத்தையும் கெடுத்து விடும். இயற்கை தந்த வரமாய் இளநீர் இருக்க குளிர்பானங்கள் தேவையற்றது. இளநீர் நம் தாகத்தைத் தணித்துப் புத்துணர்ச்சி அளிக்கிறது. (4-6- 299)

# கணவன், மனைவியை தாக்கிவிட்டு திருடர்கள் கைவரிசை

### கிளிநொச்சியில் சம்பவம்

(தருமபுரம்)

கிளிநொச்சி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புளியம்பொக்கணைப் பகுதியில் உள்ள வீடொன்றில் நேற்று இரவு ஒரு மணியளவில் புகுந்த 3 கொள்ளையர்கள் வீட்டினுள் இருந்த கணவன், மனைவி இருவரையும் தாக்கி விட்டு வீட்டினுள் காணப்பட்ட பொருட்கள் சிலவற்றை திருடி விட்டு தப்பிச் சென்றுள்ளனர். குறித்த வீட்டில் சிறுவர்கள் கத்தும் சத்தம் கேட்ட அயல் வீட்டார் உதவிக்கு வந்து தாக்குதலுக்கு உள்ளான இருவரையும் கிளிநொச்சி மருத்துவமனையில் அனுமதித்தனர். இது தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-6-316)

# மோ.சைக்கிள் திருட்டு இளைஞன் கைது

(குருமன்காடு)

வவுனியாவில் மோட்டார் சைக்கிள் திருட்டு சம்பவத்துடன் தொடர்புடைய இளைஞன் ஒருவரை வவுனியா பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்ததுடன் அவரிடம் இருந்து திருடப்பட்ட மோட்டார் சைக்கிளும் மீட்கப்பட்டது.

வவுனியாவில் பசார் வீதியில் கடந்த மார்ச் மாதம் நிறுத்தி வைத்திருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று திருடப்பட்டுள்ளதாக வவுனியா குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கு அமைவாக வவுனியா பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது, நொச்சியாகம பகுதியில் மறைத்து வைத்திருந்த மோட்டார் சைக்கிள் மீட்கப்பட்டதுடன், அதனை திருடிய இளைஞனும் கைது செய்யப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளின் பின் குறித்த இளைஞனை நீதிமன்றில் முற்படுத்த வவுனியா பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (4-6-250)

# 'கலாதரம்' பிரதேச மலருக்கு ஆக்கங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலக கலாசாரப் பிரிவினரால் 2022 ஆம் ஆண்டு 'கலாதரம்' மலர் - 04 எனும் பிரதேச மலர் வெளியீடு செய்யப்படவுள்ளமையினால் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட எழுத்தாளர்களிடமிருந்து ஆக்கங்கள் கோரப்படுகின்றன. பிரதேசத்தின் வரலாறு, பண்பாடு, கலை கலாசாரம், சமயம், மருத்துவம், பாரம்பரியங்கள், பிரதேச ஆளுமைகள் தொடர்பான தகவல்கள், வாழ்வியற் கோலங்கள், இடப்பெயராய்வுகள், சிறுகதை, கவிதை, கட்டுரை முதலிய விடயப் பரப்புக்களில் ஒன்றினை உள்ளடக்கி ஆக்கங்களை வரைந்து (தங்களைப் பற்றிய விபரங்களையும் சிறிய புகைப்படத்தினையும் இணைக்க வேண்டும்). எதிர்வரும் 31.05.2022 ஆம் திகதிக்கு முன்னர் கலாசார உத்தியோகத்தர், பிரதேச செயலகம், வலி.தென்மேற்கு, சண்டிலிப்பாய் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (4-6)


## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி சந்தை, இறைச்சிக்கடைக்கான 01.06.2022- 31.12.2022 வரையுள்ள காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான ஏலக் கேள்வி அறிவித்தல் -2022

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச நிர்வாக எல்லைக்குட்பட்ட பின்வரும் சந்தை, இறைச்சிக்கடைகளினை 01.06.2022 - 31.12.2022 வரை குத்தகைக்கு வழங்குவதற்காக ஏலத்தில் விடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஏலக்கேள்விகள், 27.10.2021 ஆம் திகதிய வலம்புரி, தினக்குரல் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட நிபந்தனைகளிற்கு அமைவாக கோரப்படுகின்றன.

ஏலம் 27.05.2022 காலை 10.30 மணிக்கு நடைபெறும்.
ஏலத்தில் பங்குபற்ற விரும்புபவர்கள் தலைமை அலுவலகத்தில் கேள்வி வைப்புப் பணத்தினை செலுத்தி பற்றுச் சீட்டினை 20.05.2022 தொடக்கம் 27.05.2022 முற்பகல் 10.00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

### 2022 ஆம் ஆண்டு சந்தைக் குத்தகை விபரம்- ஏலக் கேள்வி

| தொ.இல | குத்தகை விபரம் | 2022ம் ஆண்டுக்கான ஆகக்குறைந்த ஏலத்தொகை | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணம்(1%) | மாத வாடகை |
|---|---|---|---|---|
| | நெல்லியடி உப அலுவலகம் | | | |
| 1 | நெல்லியடி ஆட்டிறைச்சிக்கடை | 29,850.00 | 298.50 | 100.00 |
| 2 | நெல்லியடிச் சந்தை கோழிக்கடை | 321,500.00 | 3215.00 | 100.00 |
| 3 | நெல்லியடி மீன் சந்தை | 416,100.00 | 4161.00 | - |
| | உடுப்பிட்டி உப அலுவலகம் | | | |
| 4 | அந்திரான் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 630,000.00 | 6300.00 | 100.00 |
| 5 | மண்டான் சந்தை | 27,600.00 | 276.00 | - |
| 6 | உடுப்பிட்டிச் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 116,700.00 | 1167.00 | 100.00 |
| 7 | சாண்டா சந்தை கோழிக்கடை | 43,700.00 | 437.00 | 100.00 |

இதற்கான ஏலக் கேள்வியில் கலந்து கொள்பவர்கள் மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணத்தினை 27.05.2022 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு முன் செலுத்துவதுடன், சித்திகரக் கேள்விக்காரர் உடனடியாக ஏலத்தொகையின் 1/3 பங்கு பாதுகாப்பு வைப்பு பணத்தை செலுத்தி ஒப்பந்தம் செய்ய வேண்டும். பாதுகாப்பு வைப்புப் பணம் உடனடியாக செலுத்தத் தவறும் பட்சத்தில் அடுத்த கேள்விதாரருக்கு குத்தகை வழங்கப்படும்.

**தவிசாளர்,**
**வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி.**
**20.05.2022**

(சி-4343)


# எரிவாயு சிலிண்டர் வழங்கக் கோரி வீதியில் ரயர் எரித்து போராட்டம்

(கொழும்பு)

கொழும்பு - புதுக்கடைப் பகுதியில் ரயர்களைக் கொளுத்தி மக்கள் நேற்று போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

எரிவாயு சிலிண்டர் வழங்கக் கோரியே வீதியை மறித்து நடு வீதியில் ரயர்களை எரித்து போராட்டத்தை மேற்கொண்டனர். இதன்போது போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்கள் கூறுகையில்,

எமக்கு ரணிலும் வேண்டாம், கோட்டாவும் வேண்டாம். புதுக்கடை மக்கள் அனைவரும் கோட்டா கோ கமவிற்கு செல்லவுள்ளோம்.

மக்கள் சாப்பிட இல்லாமல் இருக்கிறார்கள். 25 நாட்களாக எரிவாயு சிலிண்டர் வரவில்லை. மண்ணெண்ணெயும் இல்லை. நாங்கள் என்ன செய்வது. உடனடியாக எங்களுக்கு தீர்வு வேண்டும் எனத் தெரிவித்தனர். (4-6)




### தமிழ் மற்றும் சிங்கள பாடசாலைகளுக்கான பாடசாலை நாட்காட்டி, கல்வியாண்டு - 2022

| | |
|---|---|
| முதலாம் தவணை (கட்டம் 01) | 18.04.2022 - 20.05.2022 |
| விடுமுறை 2021 O/L பரீட்சைக்கான | 21.05.2022 - 05.06.2022 |
| முதலாம் தவணை (கட்டம் 02) | 06.06.2022 - 08.07.2022 |
| விடுமுறை முதலாம் தவணை | 09.07.2022 - 17.07.2022 |
| இரண்டாம் தவணை | 18.07.2022 - 16.09.2022 |
| மூன்றாம் தவணை (கட்டம் 01) | 19.09.2022 - 13.10.2022 |
| விடுமுறை 2022 A/L பரீட்சைக்கான | 14.10.2022 - 13.11.2022 |
| மூன்றாம் தவணை (கட்டம் 02) | 14.11.2022 - 23.12.2022 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பாரிய நெருக்கடிக்குள் நாடு

# அன்றாட செலவுகளுக்கே திறைசேரியில் பணம் இல்லை

## பிரதமர் எச்சரிக்கை

(கொழும்பு)

**இலங்கையில் அன்றாடத் தேவைகளுக்கு செலவிட திறைசேரியில் பணம் இல்லை என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**



இது தொடர்பான விரிவான அறிக்கை அடுத்த வாரம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என அவர் நேற்று தெரிவித்தார்.

அன்றாட நுகர்வுக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கான செலவினங்களுக்காக உடனடியாக நிதியைக் கண்டறிய வேண்டியதன் அவசியத்தையும் பிரதமர் இதன்போது வலியுறுத்தினார்.

இந்த விடயம் இலங்கையை மாத்திரம் பாதிக்கும் பிரச்சினையல்ல எனவும் பிரதமர் சுட்டிக்காட்டினார்.

உணவு நெருக்கடி உலகளாவிய நெருக்கடியாகமாறுவதற்கான அறிகுறிகள் தென்படுவதாகவும் நிலைமையை முன்னறிவிப்பதற்கும் நடவடிக்கை எடுப்பதற்கும் உலக வங்கி 30 பில்லியன் டொலர்களை ஒதுக்கியுள்ளதாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். (நி-6)

# மீண்டும் அதிகரிக்கிறது மதுபானங்களின் விலை

(கொழும்பு)

மதுபானங்களின் விலையை மீண்டும் அதிகரிக்க மதுபான உற்பத்தி நிறுவனங்கள் நடவடிக்கை எடுத்து வருவதாக தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

மதுபான உற்பத்திக்காக பயன்படுத்தப்படும் எதனோலின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளமையால் இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக தெரிய வருகின்றது.

எதனோலின் விலை 700 ரூபாவில் இருந்து 1000 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# பாராளுமன்ற தவிசாளர் குழுவில் சாணக்கியன்

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் நேற்று சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தனவால் அறிவிக்கப்பட்ட புதிய தவிசாளர் குழாமில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் உட்பட சாந்த பண்டார, வேலுகுமார்,மயந்த திஸாநாயக்க,ஹர்ஷன ராஜ கருணா, ரோஹினி குமாரி விஜயரத்ன, ஹேஷா விதானகே, கோகிலா குணவர்தன, பிரேம்நாத் தொலவத்த, வசந்த யாப்பா பண்டார, வீரசுமன வீரசிங்க, சுரேன் ராகவன், ஹரினி அமரசூரிய ஆகியோர் புதிய தவிசாளர் குழாமில் இடம் பிடித்துள்ளனர். (நி-6)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 3
கி.பா: சூரி. செவ் 10 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:HNDAமின்மாணிவாசிப்பாளர்
எதிர்பார்ப்பு:அரச தொழில் அல்லதுதனியார் தொழில் அல்லது சாதாரணபடித்தபெண்
தொ.இ: B/12679

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம் : அனுசம் 1
கி.பா:24 சூரி 10 செவ் 12 இல்
உயரம்:5'5"
தகைமை/தொழில்:A/L மலேசியா
எதிர்பார்ப்பு:சாதாரண படித்த பெண்
தொ.இ: B/12682

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: சித்திரை 2
கி.பா:28 சூரி 8 செவ் 6 இல்
உயரம்:5'5"
தகைமை/தொழில்: பொறியியலாளர்
எதிர்பார்ப்பு: உயர்பதவி
தொ.இ: B/12684

பிறப்பு:1990 கிறிஸ்தவம் RC
உயரம்:5'8'
தகைமை/தொழில்:B.comM.com Financial Accountant Senior Executive Accounts
எதிர்பார்ப்பு: படித்த இந்தியா செல்லக் கூடியபெண்
தொ.இ: B/12685

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 16 ½ சூரி .செவ் 10 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: அரச.தனியார்/ சொந்ததொழில்
தொ.இ:G/9730

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: பூராடம் 1
கி.பா: 40 ¼ சூரி 7 செவ் 12 இல்
உயரம்:5'
தகைமை/தொழில்: பொறியியலாளர் (தனியார்)
எதிர்பார்ப்பு: ITதொழில்நுட்பம் சார்ந்ததொழில் புரிபவர்
தொ.இ:G/9735

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: அவிட்டம் 2
கி.பா: 63 சூரி 11 செவ் 8 இல்
உயரம் : 5'3"
தகைமை/தொழில்:B.F.A. பட்டதாரி
எதிர்பார்ப்பு: தகுந்த உள்நாடு வெளிநாடு
தொ.இ:G/9747

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்:திருகோணம்
கி.பா:26 ½ சூரி .செவ் 2 இல்
உயரம்:5'6"
தகைமை/தொழில்: BSc ,TO
எதிர்பார்ப்பு: பட்டதாரி அரச உத்தியோகம்
தொ.இ:G/9766

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் [illegible]
சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.



**Invitation for Bids (IFB)**
**Manitenance & service of Intercom Telephone system at Teaching Hospital - Jaffna for Year 2022/2023**

1. The Chairman, Regional Procurement Committee invites sealed bids from eligible and experienced and reputed qualified Applicants for Annual Maintenance Services of **NEC SVS 8100 IP PABX** Intercom at Teaching Hospital, Jaffna, for the year 2022/2023 as described below.
2. Bidding will be conducted through National Competitive Bidding (NCB) method.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and bidder shall be registered under Telecommunication Regulatory Commission (TRC) for supply and maintenance of Communication Equipments and possess Business Registration for this purpose.
4. A Complete set of bidding documents in English language may be purchased by interested bidders from the Administrative Office of the Teaching Hospital - Jaffna, on working days between 09:00 am. and 03:00 pm from 2022-May-20 to 2022-June-05on submission of a written request to the address below and payment of a non-refundable fee of Rs. 1,500.00 with the certified copy of the following documents.
   - A copy of the Business Registration Certificate
   - A copy of Telecommunication Regulatory Commission (TRC) license
5. The Intercom System can be inspected on working days between 09:30 am. and 03:00 pm. up to 2022-June-5.
6. Sealed bids shall be deposited with duplicate in the tender Box made available at Director, Teaching Hospital Jaffna or sent by registered post addressed to the Director, Teaching Hospital Jaffna at the above address to reach him on or before **10.00 am on 2022-June-6**. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders representatives who choose to attend at the above address.
7. All bids must accompanied a bid security issued by a reputable bank in Sri Lanka amounting for LKR 100,000.00 for the validity period of 119 days (up to 03.10.2022) the Bidder or one of his representatives is permitted to be present at the opening of the bids.
8. The Director Teaching Hospital. Jaffna reserves the right to reject any or all Bids and the right to accept any portion of a bid, at any time prior to awarding of a contract without giving any reasons for such .Clients not bound to accept the lowest or any bids.
9. Interested eligible bidders may obtain further information from Hospital Secretary at Teaching Hospital- Jaffna, on working days between 9:00 a.m. and 2:30 p.m.
10. Pre-bid meeting will be held at **10.00 am on 2022-May-27** at Directors offices, Teaching Hospital Jaffna.

(c-4339)

Director (Chairman),
Regional Procurement Committee,
Teaching Hospital, Jaffna.

2022-May-20


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## முகநூல் தரிசனம் 50

# தன்னம்பிக்கையே உலகின் மிகச் சிறந்த ஆயுதம்...



எனக்கு மட்டும் ஏன் இவ்வளவு பெரிய தண்டனை.. ?

கடவுளுக்கு கண்ணே இல்லை என்று மனம் நொந்து போய் பேசுவோர்... எவ்வளவோ பேர்,

மன விரக்தி அடைஞ்சு - தற்கொலை பண்ணுவதை, செய்திகளில் பார்க்கிறோம்..! கடவுள் தரும் சோதனை, நீங்கள் நிச்சயம் எதையோ சாதிக்க வேண்டும் என்பதற்காகவே... !

எதை நினைத்தும் கலங்க வேண்டாம் என்று சொல்வது எளிதுதான்...! ஆனால் ஒரு பக்குவம் உங்களுக்கும் வேண்டும் அதேபோல் அதற்கு ஒரு எடுத்துக்காட்டாக 1995 ஆம் ஆண்டு பெங்ஷுளின் ( Peng Shulin ) என்ற ஒரு சீனர் மேல் ஒரு லொறி மோதியதால் அவரது உடல் இரண்டாக வெட்டப்பட்டது.

இப்படியான ஒரு பெரிய விபத்திலிருந்து அவர் உயிர் பிழைத்தது விந்தையானது. 20 மருத்துவர்கள் சேர்ந்து போராடி அவர் உயிரைக் காப்பாற்றினார்கள்.

அவர் தலையில் இருந்து எடுக்கப்பட்ட தோல் பரிசோதனைச்சாலையில் வளர்க்கப்பட்டு வெட்டுப்பட்ட உடல் பாகங்கள் மூடப்பட்டன.

அவர் ஆப்ரேசன் தியேட்டருக்குப்போய் வந்த எண்ணிக்கை கணக்கிலடங்காதது.

இத்தனை முயற்சிகளால் உயிர் பிழைத்த அந்த மனிதரின் உயரம் 78 cm (இரண்டரை அடி ) மட்டுமே. அன்றிலிருந்து படுக்கையில் வாழ்ந்த இந்த துரதிர்ஷ்ட மனிதர் சாதாரண வாழ்க்கை வாழ முடியுமென்று எவரும் கனவு கூடக் கண்டிருக்க முடியாது.

ஆனால் அவர் தன்னம்பிக்கையை இழக்கவில்லை. தனது கைகள் பலம் பெறும் வண்ணம் தேகாப்பியாசம் செய்யத் தொடங்கினார்.

தனது அன்றாடத் தேவைகளை முடிந்த அளவில் தானே செய்ய முனைந்தார். பல் துலக்குவது, முகங்கழுவுவது போன்றவற்றை அவரே செய்தார்.

இவரது விடா முயற்சி பற்றியறிந்த சீன புனர்வாழ்வு ஆய்வுக் கழகம் இவரை நடக்க வைக்கும் முயற்சியிலிறங்கியது.

எவர் உதவியுமில்லாமல் நடக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட உபகரணமொன்று கண்டுபிடிக்கப்பட்டது.

ஒரு முட்டை வடிவில் அமைக்கப்பட்ட ஒரு உறையினால் உடம்பின் கீழ்ப் பாகம் தாங்கப்பட்டு, அதனுடன் இரண்டு பயோனிக் கால்கள் (bionic legs) பொருத்தப்பட்டன.

பன்னிரண்டு வருடங்கள் கட்டிலில் வாழ்ந்த இந்த மனிதர் நடை பயில்வதைப் பார்த்து வியக்காமலிருக்க முடியவில்லை.

இதை மருத்துவ தொழில்நுட்ப விந்தை என்று மட்டும் கருதி விட முடியாது. அந்த மனிதர் முகத்தில் தெரியும் பிரகாசமும், தன்னம்பிக்கையும், உற்சாகமும் ...

அந்த மனவலிமைதான் முக்கிய காரணமென்பதை நம் அனைவருக்கும் சொல்லாமல் சொல்கிறது.

சின்னச் சின்னத் தோல்விகளைத் தாங்க முடியாமல் துவண்டுவிடும் போதெல்லாம் இந்தச் சம்பவம் நமக்கு நினைவில் எடுத்துக்காட்டாக அமையலாம்.

**அன்பு வாசகர்களே!**

முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் viber இலக்கத்திற்கு அல்லது valampurii@yahoo.com எனும் E-Mail இற்கு அனுப்பி வையுங்கள்.

## குரங்கு அம்மை நோய் பரவல்

### ஆய்வு நடத்த உத்தரவு

(மாட்ரிட்)

ஆபிரிக்காவில் பரவும் குரங்கு அம்மை நோய் இது ஐரோப்பா மற்றும் அமெரிக்காவில் பரவி வருவது குறித்து ஆய்வு நடத்த உலக சுகாதார அமைப்பு உத்தரவிட்டுள்ளது.

பிரிட்டனில் கடந்த வாரம் குரங்கு அம்மை நோய் கண்டறியப்பட்டது. ஆபிரிக்காவில் இருந்து திரும்பியவர்களிடம் இருந்து இந்த நோய் பரவியிருக்கலாம் என கூறப்பட்டது.

இதைத் தொடர்ந்து இந்த நோய் ஸ்பெயின்; போர்த்துக்கல் ஆகிய நாடுகளில் பரவி 40 இற்கும் மேற்பட்டோருக்கு குரங்கு அம்மை கண்டறியப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து அமெரிக்காவிலும் ஒருவருக்கு குரங்கு அம்மை ஏற்பட்டுள்ளது. அவர் சமீபத்தில் கனடாவில் இருந்து திரும்பியதாக கூறப்படுகிறது. இது குறித்து ஆய்வு நடத்த உலக சுகாதார அமைப்பு உத்தரவிட்டுள்ளது. (நி-6)

## உக்ரைன்

## உலக உண

### ஐ.ந

(ஜெனிவா)

உக்ரைன் மீதான ர


விரைவில் ஏற்படு

எச்சரித்துள்ளது.

நியூயோர்க்கில் நேற்று முன் தினம் புதன்கிழமை பேசிய ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டரெஸ் "விலைவாசி உயர்வு காரணமாக ஏழை நாடுகளில்

## புகுஷிமா அணு உலை க

### பசுபிக் கடலில் திறந்து விட ஜப்



(டோக்கியோ)

கடந்த 2011ஆம் ஆண்டு சுனாமியில் உருக்குலைந்த புகுஷிமா அணு உலை கழிவு நீரை பசுபிக் பெருங்கடலில் திறந்து விட ஜப்பானின் அணுசக்தி ஒழுங்கு முறை ஆணையம் ஒப்புதல் வழங்கியுள்ளது. பாதிக்கப்பட்ட ஆலையில் இருந்து சுமார் 1 கி.மீ. தொலைவில்

## வேகமாக உயரும் கட

### ஆபத்து அதிகம்-உலக வானில

(ஜெனிவா)

உலகப் பெருங்கடல்கள் முன்னொருபோதும் இல்லாதவாறு கடந்த ஆண்டு அதிக வெப்பமயமானதுடன், அதிகளவு அமிலத்தன்மை கொண்டதாக மாறியுள்ளதாக உலக வானிலை அமைப்பு (WMO) எச்சரித்துள்ளது.

அத்துடன், கடந்த தசாப்தத்தில் கடல் மட்டம் 4.5 செ.மீ. (1.8 அங்குலம்) உயர்ந்துள்ளது. 1993 முதல் 2002 வரையான கடல்மட்ட அதிகரிப்பை விட 2013 முதல் 2021 வரையிலான காலப்பகுதியில் கடல் மட்டம் இரண்டு மடங்கு அதிகமாக உயர்ந்துள்ளது எனவும் அந்த எச்சரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெப்பநிலை அதிகரிப்பே இதற்கு பிரதான காரணியாகும். அத்துடன், இது தீவிர வெப்ப அலைகள், காட்டுத் தீ, வெள்ளம் மற்றும் பிற காலநிலை தொடர்பான பேரழிவுகளை ஏற்படுத்தியதுடன், 100 பில்லியன் டொலருக்கு அதிகமான சொத்துக்கள் சேதத்துக்கு வழிவகுத்தது எனவும் உலக வானிலை அமைப்பு தெரிவித்துள்ளது.

உக்ரைனில் நடக்கும் போர் உலகின் காலநிலை மாற்றத்தைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பு

# ...ணவு நெருக்கடியை விரைவில் ஏற்படுத்தும்

## ...ஐ.நா.எச்சரிக்கை



...மீதான ரஷ்யாவின் படையெடுப்பு, உலக உணவு நெருக்கடியை ... ஏற்படுத்தக்கூடும் என்று ஐக்கிய நாடுகள் சபை ...ளது.

உணவுப் பாதுகாப்பின்மையை போர் மோசமாக்கியுள்ளது.

உக்ரைனின் ஏற்றுமதிகள் போருக்கு முந்தைய நிலைக்குத் திரும்பவில்லை என்றால், சில நாடுகள் நீண்டகாலப் பஞ்சத்தை எதிர்கொள்ள நேரிடும்" என அவர் தெரிவித்தார்.

போரால் உக்ரைனின் துறைமுகங்களில் இருந்து விநியோகம் நிறுத்தப்பட்டது. இது ஒரு காலத்தில் அதிக அளவு சமையல் எண்ணெய் மற்றும் சோளம் மற்றும் கோதுமை போன்ற தானியங்களை ஏற்றுமதி செய்தது.

இது உலகளாவிய விநியோகத்தைக் குறைத்து, மாற்றுப்பொருட்களின் விலை உயர வழிவகுத்தது. உலக உணவுப் பொருட்களின் விலை கடந்த ஆண்டு இதே காலத்தை விட கிட்டத்தட்ட 30 சதவீதம் அதிகமாக உள்ளது. (நி-6)

# ...ல கழிவு நீரை ...ட ஜப்பான் முடிவு



உள்ள பசுபிக் பெருங்கடலில் கடலுக்கு அடியில் ஒரு சுரங்கப்பாதை மூலம் கழிவு நீரை வெளியேற்றுவது அரசாங்கத்தின் திட்டம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் அடுத்த ஆண்டின் ஆரம்பத்தில் தொடங்கப்படலாம் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆனால் இந்தத் திட்டத்துக்கு மீனவர்களும், சுற்றுச்சூழல் ஆர்வலர்களும் கடும் எதிர்ப்பு தெரிவித்து வந்த நிலையில், தற்போது, அணு கழிவுகள் அகற்றப்பட்ட கழிவு நீரை கடலில் திறந்து விடும் திட்டத்துக்கு ஜப்பானின் அணுசக்தி ஒழுங்கு முறை ஆணையம் ஒப்புதல் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# ... கடல்மட்டம் ...வானிலை அமைப்பு

கட்டுப்படுத்துவதற்கான கடப்பாடுகளுக்கு அச்சுறுத்தலாக மாறியுள்ளதாக காலநிலை மாற்றம் தொடர்பாக கண்காணித்துவரும் ஐ.நா. அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

2021 ஆம் ஆண்டில் கடல் மட்டம் குறிப்பிடத்தக்க அளவுக்கு உயர்ந்துள்ளது. அதிக வெப்பம் காரணமாக பனிக்கட்டிகள் உருகுவதே கடந்த ஆண்டு கடல்மட்டம் கணிக்கப்பட்டதை விட குறிப்பிடக்தக்க அளவு உயர காரணமாக இருந்தது என உலக வானிலை அமைப்பு நேற்று முன்தினம் வெளியிட்ட அதன் வருடாந்த சர்வதேச காலநிலை அறிக்கையில் தெரிவித்துள்ளது. (நி-6)

# அசாமில் வெள்ளப்பெருக்கு

- ❖ 8 பேர் உயிரிழப்பு
- ❖ 1089 கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கின



(டில்லி)

அசாமில் வெள்ள நிலைமை தொடர்ந்து மோசமாக உள்ளதால் 26 மாவட்டங்களில் 1,089க்கும் மேற்பட்ட கிராமங்கள் நீரில் மூழ்கியுள்ளது. இந்த வெள்ளம் மற்றும் நிலச்சரிவு காரணமாக இதுவரை 8 பேர் உயிரிழந்துள்ளனர்.

வெள்ளம் பாதிக்கப்பட்டுள்ள 26 மாவட்ட நிர்வாகங்களால் 142 நிவாரண முகாம்கள் மற்றும் 115 நிவாரண விநியோக மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன,

அசாம் மாநிலத்தில் தற்போது வழக்கத்தை விட அதிக மழை பெய்துள்ளதாகவும், அடுத்த இரண்டு நாட்களுக்கு அதிக மழை பெய்யும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. (நி-6)



# சுவீடன், பின்லாந்து தாக்கப்பட்டால் ரஷ்யாவுக்கு எதிராக களமிறங்குவோம்

## போலந்து எச்சரிக்கை

(போலந்து)

சுவீடன், பின்லாந்து மீது தாக்குதல் நடத்தப்பட்டால் போலந்து அவர்களுக்கு உதவும் என்று அந்நாட்டு பிரதமர் மேட்யூஸ் மொரா விக்கி தெரிவித்துள்ளார்.

அதாவது, நேட்டோ உறுப்புரிமையைப் பெறுவதற்கு முன்பு அவர்கள் தாக்கப்பட்டால் சுவீடன் மற்றும் பின்லாந்துக்கு போலந்து உதவும் என்று பிரதமர் மேட்யூஸ் மொராவிக்கி தெரிவித்துள்ளார்.

சுவீடன் மற்றும் பின்லாந்து நேட்டோவில் இணைவது ஐரோப்பாவில் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கான ஒரு முக்கிய நடவடிக்கையாக நான் கருதுகிறேன்.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பை தொடர்ந்து பின்லாந்து மற்றும் சுவீடன் கடந்த புதன்கிழமை நேட்டோ கூட்டணியில் சேர முறைப்படி விண்ணப்பித்துள்ளன.

சேர்க்கை நடைமுறைக்கு ஒரு சில வாரங்கள் மட்டுமே எடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதல பாதாளத்திற்குள் நாடு

# 13 வருடங்களின் பின்னும் படையினருக்கு பதவி உயர்வு

## அருட்தந்தை சக்திவேல்



(நெளுக்குளம்)

**இனப்படுகொலைக்கு நீதி கேட்டும் படுகொலை செய்யப்பட்டவர்களை நினைந்தும் அழுது புலம்பி தமிழர்கள் ஈகச்சுடர் ஏற்றும் நாளில் அரசு யுத்த வெற்றிக் களிப்புடன் இவ்வருடமும் தரைப்படை, கடற்படை, ஆகாயப் படையை சேர்ந்தோருக்கு பதவி உயர்வு கொடுத்திருப்பது தமிழர்களைப் பொறுத்தவரையில் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல் அமைந்துள்ளது.**

அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சக்திவேல் நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையின் 13 ஆம் ஆண்டு ஈக சுடரேற்றும் நாளிலேயே ராஜிவ் காந்தி கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு மூன்று தசாப்தங்களுக்கு மேலாக சிறை வைக்கப்பட்டிருந்த பேரறிவாளன் விடுதலை செய்யப்பட்டிருக்கின்றார். இவ் விடுதலையை அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு மகிழ்ச்சியோடு வரவேற்கிறது.

இந்திய சி.பி.ஐ அதிகாரி தியாகராஜன் பேறிவாளனின் சாட்சிப் பதிவை பிழையாக பதிவிட்டமை பேறிவாளனின் 30 வருட சிறை வாழ்வுக்கு காரணமாக அமைந்துள்ளது. அத்தோடு மாநில ஆளுநர் தன் கடமையைச் சரியாக நிறைவேற்றாமையும் விடுதலை காலதாமதத்திற்கு காரணமாக அமைந்துள்ளது.

அதிகாரிகளின் அசமந்தப் போக்கும் அரசியல் கைகழுவலும் உயிர்களோடு விளையாடும் விளையாட்டாக அமைந்துள்ளது என்பதும் பேரறிவாளனின் சிறைவாழ்க்கைக்கு நல்ல உதாரணமாகும்.

இலங்கையிலும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் பத்து வருடங்களை கடந்த பின்னர் குற்றங்கள் சுமத்தப்படாத நிலையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். அது மட்டுமல்ல இனவாத நோக்கில் புரியாத மொழியில் பதிவு செய்யப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் காரணமாக தண்டனை அனுபவிப்பவர்கள் இன்னும் பலர்.

இலங்கையில் இன நல்லிணக்கம் தொடர்பாக கருத்து தெரிவிக்கும் ஆட்சியாளர்கள் அதிகாரிகள் சிறையில் வாடும் அரசியல் கைதிகளுக்கு எதிராக இன வாத நோக்கில் பதியப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் வழக்குகள் காரணமின்றி இழுத்தடிப்பு செய்தல் என்பவற்றை மனசாட்சியோடு திருத்திகொள்ளும் போதே அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படுவர்கள். அதுவே உண்மையான நல்லிணக்கம் ஏற்படும் என்பதற்கான ஆரம்ப சான்றாகவும் அது அமையும்.

நாடு பொருளாதார ரீதியில் படுபாதாளத்திற்கு தள்ளப்பட்டு மக்கள் வீதியில் தொடர் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கையில் யுத்தம் முடிவுற்று பதின் மூன்று வருடங்களை கடந்த பின்னர் யுத்த வெற்றி என முப்படையை சார்ந்தோருக்கு பதவி உயர்வு கொடுத்திருப்பது அரசியல் காரணங்களுக்காக அன்றி வேறொன்றுமில்லை. ஆட்சியாளர்கள் தம் ஆட்சியை நடத்துவது மக்களை நம்பி அல்ல படைகளை நம்பியே என்பது முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நாளில் மீண்டும் உறுதியாகியுள்ளது என தெரிவிக்கப்படுகிறது. (4-6-299)

## அவுஸ்திரேலியா செல்ல முற்பட்ட 8 பேர் புத்தளத்தில் கைது

(குருமன்காடு)

வவுனியாவைச் சேர்ந்த பெண் ஒருவர் உட்பட 8 பேர் புத்தளம், கருவெலச்செவ பொலிஸாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

வவுனியாவின் பாலமோட்டை, குஞ்சுக்குளம், கொந்தக்காரங்குளம், நெடுங்கேணி, கீரிசுட்டான் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 8 பேர் வவுனியாவில் இருந்து பேருந்து மூலம் புத்தளம் சென்று அங்கு சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடியதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து குறித்த 8 பேரும் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடம், பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் போது அவர்கள் சட்டவிரோத ஆட்கடத்தல்காரார்கள் மூலம் அவுஸ்திரேலியா செல்ல முற்பட்டுள்ளதாகவும், அதற்காகவே புத்தளம் வருகை தந்துள்ளதாகவும் தெரியவந்தது. இதனையடுத்து குறித்த 8 பேரும் கைது செய்யப்பட்டு மேலதிக விசாரணைகளின் பின் அவர்களை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்தனர். (4-6-250)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 200 | 350 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 300 |
| தக்காளி | 600 | 600 | 800 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 180 | 120 |
| கோவா | 230 | 200 | 300 |
| கரட் | 180 | 350 | 400 |
| பூசணி | 140 | 90 | 120 |
| புடோல் | 250 | 250 | 240 |
| வாழைக்காய் | 50 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 350 | 300 | 400 |
| பெரிய வெங்காயம் | 180 | 200 | 200 |
| பாகற்காய் | 550 | 2000 | 500 |
| வெண்டக்காய் | 180 | 120 | 300 |
| கருணைக் கிழங்கு | 160 | 180 | 200 |
| பயற்றங்காய் | 550 | 500 | 250 |
| லீக்ஸ் | 200 | 250 | 250 |
| பீற்றூட் | 350 | 200 | 480 |
| கறிமிளகாய் | 350 | 350 | 480 |
| முருங்கைக்காய் | 1000 | 1400 | 1200 |
| போஞ்சி | 400 | 600 | 520 |
| கத்தரிதம்புள்ள | 280 | 150 | 320 |
| கீரை - 1 பிடி | 120 | 80 | 140 |
| தேசிக்காய் | 600 | 600 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 75 | 50-80 |
| இராசவள்ளி | 180 | 200 | 150 |
| வெங்காயப்பூ | 400 | -- | 360 |
| முள்ளங்கி | 80 | 180 | 280 |
| பொன்னாங்காணி | 60 | 70 | 60 |
| வல்லாரை | 20 | 20 | 40 |
| ஈரப்பலா | -- | -- | 140 |

# மாவட்டத்தின் தேவைக்கு மிஞ்சிய பாலே வெளி மாவட்டங்களுக்கு

## கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் தீர்மானம்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் உற்பத்தியாகும் பாலினை மாவட்ட மக்களுக்கு கிடைக்கூடிய வகையில் விநியோகிக்கப்பட்டு மிஞ்சிய பாலையே வெளிமாவட்டங்களுக்கு எடுத்துச்செல்ல வேண்டுமென கால்நடை வளர்ப்போருக்கான விசேட கலந்துரையாடலில் தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.

கிளிநொச்சி மாவட்டத்தில் கால்நடை வளர்ப்போருடனான விசேட கலந்துரையாடல் நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்டசெயலக மண்டபத்தில் மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற போதே மேற்படி தீர்மானம் கொண்டு வரப்பட்டுள்ளது.

பால்மாவுக்கான தட்டுப்பாடு நிலவும் சூழ்நிலையில், மாவட்டத்துக்குள்ளே வசிக்கும் மக்களுக்கு கிடைக்கூடிய வகையில் பால் விநியோகத்தை மேம்படுத்துதல் வேண்டும். தனியார் பால் கொள்வனவாளர் மாவட்டத்தின் தேவைக்கு மிஞ்சியதையே வெளிமாவட்டங்களுக்கு எடுத்துச்செல்ல வேண்டும்.

மேலும் கால்நடைகளுக்கான தீவனங்களைப் பெற்றுக்கொள்வதில் உள்ள சவால்கள் குறித்தும் ஆராயப்பட்டதுடன், கால்நடைத் தீவனமாக புல் உற்பத்தியில் ஈடுபடுவதுடன், அதிலிருந்து சைலேஜ் எனப்படும் கால் நடைத் தீவன உற்பத்தியிலும் கால்நடை வளர்ப்போர் கவனம் செலுத்த வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

தொடர்ந்து அதிகளவு எண்ணிக்கையான பட்டி மாடுகளை வளர்ப்போர் எதிர்கொள்ளும் மேய்ச்சல் தரவைப் பிரச்சினை தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட்டதுடன், கனகாம்பிகைக்குளம் பகுதியில் ஏற்கனவே மேய்ச்சல் தரவைக்கென ஒதுக்கப்பட்ட காணியை உரிய தேவைக்குப் பயன்படுத்த நடவடிக்கை எடுப்பதாக தீர்மானிக்கப் பட்டதுடன், பூநகரி பள்ளிக்குடா மற்றும் முழங்காவில் பிரதேசங்களிலும் மேய்ச்சல் தரவைக்கான ஏற்பாடுகளைச் செய்வது தொடர்பாகவும் ஆராயப்பட்டது. (4-6-315)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைகாசி மாத இராசி பலன்கள்

## 15.05.2022-14.06.2022

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

## சுபகாரியம் நடைபெறுவதற்கான அறிகுறி தென்படும்!



**அன்பாகப் பேசி அனைவர் மனதிலும் இடம்பிடிக்கும் துலாம் இராசி வாசகர்களே!**

வைகாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் சுக்கிரன் உச்சம் பெற்று 6 ஆம் இடத்தில் சஞ்சரிப்பதால் "விபரீத இராஜயோகம்" அடிப்படையில் எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படும். ஜென்மத்தில் கேது இருப்பதால் ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும்.

**மீன - செவ்வாய் சஞ்சாரம்**

வைகாசி 3 ஆம் திகதி, மீன இராசிக்கு செவ்வாய் செல்கிறார். உங்கள் இராசிக்கு 2, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய், 6 ஆம் இடத்திற்கு செல்லும் பொழுது சில எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மருத்துவம் சார்ந்த தொழிலில் இருப்பவர்களுக்கு மகத்தான பலன் கிடைக்கும். அடகு வைத்த நகைகளை மீட்பீர்கள்.

**சனி - செவ்வாய் பார்வைக் காலம்**

வைகாசி 3 ஆம் திகதி முதல் மாதக் கடைசி வரை, மீனத்தில் உள்ள செவ்வாயை மகரத்தில் இருக்கும் சனி பார்க்கப் போகிறார். உங்கள் இராசிக்கு 4 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் சனி பகவான், தன-சப்தமாதிபதி செவ்வாயைப் பார்க்கும் பொழுது பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். தொழில், உத்தியோகத்தில் இருந்த குறுக்கீடுகள் அகலும். உடல்நலம் சீராக மாற்று மருத்துவம் கைகொடுக்கும்.

**புதன் வக்கிர நிவர்த்தியும், ரிஷப சஞ்சாரமும்**

வைகாசி 7 ஆம் திகதி, மேஷ இராசியில் புதன் வக்கிர நிவர்த்தியாகிறார். உங்கள் இராசிக்கு 9, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன், வக்கிர நிவர்த்தியாகும் பொழுது வாகன யோகம் ஏற்படும். பயணங்கள் அதிகரிக்கும். வைகாசி 23 ஆம் திகதி, ரிஷப இராசிக்கு புதன் செல்கிறார். மறைந்த புதனால் நிறைந்த தன இலாபம் கிடைக்கும். கல்விக்காக எடுத்த முயற்சி கைகூடும். மங்கல நிகழ்ச்சி நடைபெறும்.

**மேஷ - சுக்கிரன் சஞ்சாரம்**

இதுவரை உச்சம் பெற்று மீனத்தில் சஞ்சரித்த சுக்கிரன், வைகாசி 10 ஆம் திகதி மேஷ இராசிக்கு செல்கிறார்.




உங்கள் இராசிநாதன் சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிப்பது நல்ல நேரம்தான். சுபகாரியம் நடைபெறுவதற்கான அறிகுறி தென்படும். குடும்ப முன்னேற்றம் திருப்தி தரும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. நினைத்ததை நினைத்தபடி செய்து முடிப்பீர்கள்.

**மகரச் சனியின் வக்கிர காலம்**

உங்கள் இராசிக்கு சுக ஸ்தானம் மற்றும் பூர்வ புண்ணிய ஸ்தானத்திற்கு அதிபதியான சனி பகவான், வைகாசி 11 ஆம் திகதி வக்கிரம் பெறுகிறார். அது அவ்வளவு நல்லதல்ல. சுகக்கேடு அதிகரிக்கும். துணிவும், தன்னம்பிக்கையும் குறையும். இது போன்ற காலங்களில் முறையான வழிபாடு அவசியம். வீண் விரயங்கள் அதிகரிக்கும். வியாபாரத்தில் போட்டி நிலவும். உத்தியோகத்தில் உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்காது. இம்மாதம் பட்டாபிஷேக ராமர் படத்தை இல்லத்தில் வைத்து வழிபடுவது நல்லது.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்கம் இருப்பதால் எதையும் ஒரு முறைக்குப் பலமுறை யோசித்து செய்வது நல்லது. அனுபவஸ்தர்களின் ஆலோசனை கைகொடுக்கும். ஆரோக்கியம் சீராக மாற்று மருத்துவம் பலன் தரும். கணவன் - மனைவிக்குள் விட்டுக்கொடுத்தல் அவசியம். பிள்ளைகளின் திருமணப் பேச்சு முடிவாகலாம். எதிர்பார்த்த சம்பள உயர்வும், உத்தியோக உயர்வும் கிடைக்கும். சனியின் வக்கிர காலத்தில் கவனம் தேவை.

## பூர்வ புண்ணிய ஸ்தானம் வலுப் பெறும் நேரம் இது!



**கொள்கைப் பிடிப்போடு செயற்பட்டு கொடுத்த வாக்கைக் காப்பாற்றும் விருச்சிக இராசி வாசகர்களே!**

வைகாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாத்ன் செவ்வாய் சுக ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். குருவின் பார்வை உங்கள் இராசியில் பதிவதால், மாதம் முழுவதும் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**மீன - செவ்வாய் சஞ்சாரம்**

வைகாசி 3 ஆம் திகதி, மீன இராசிக்கு செவ்வாய் செல்கிறார். உங்கள் இராசிநாதனாகவும், 6 இற்கு அதிபதியாகவும் விளங்கும் செவ்வாய், பூர்வ புண்ணிய ஸ்தானத்திற்கு செல்லும் போது, புதிய பொறுப்புகள் கிடைக்கும். அங்குள்ள குருவோடு செவ்வாய் சேர்ந்து "குரு மங்கள யோக"த்தை உருவாக்குவதால் இல்லத்தில் மங்கல ஓசை கேட்கும். ஆகாரத்தில் அக்கறை செலுத்துங்கள்.

**சனி - செவ்வாய் பார்வைக் காலம்**

வைகாசி 3 ஆம் திகதி முதல் மாதக் கடைசி வரை, மீனத்தில் உள்ள செவ்வாயை மகரத்தில் உள்ள சனி பார்க்கப்போகிறார். அதாவது உங்கள் இராசிநாதன் செவ்வாயை சகாய ஸ்தானாதிபதி சனி பார்ப்பதால் எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும். எதிர்பாராத சில வாய்ப்புகள் தொழில் முன்னேற்றத்திற்கு வழிவகுத்துக் கொடுக்கும். பிள்ளைகளின் கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பூர்வ புண்ணிய ஸ்தானம் வலுப் பெறும் நேரம் இது.

**புதன் வக்கிர நிவர்த்தியும், - ரிஷப சஞ்சாரமும்**

வைகாசி 7 ஆம் திகதி, புதன் வக்கிர நிவர்த்தியாகிறார். உங்கள் இராசிக்கு அஷ்டம-லாபாதிபதியான புதன், வக்கிர நிவர்த்தியாவது நன்மைதான். தொழில் வளர்ச்சி அபரிமிதமாக இருக்கும். சேமிப்பு உயரும். வைகாசி 23 ஆம் திகதி, ரிஷப இராசிக்கு புதன் செல்கிறார். இக் காலம் இனிய காலமாக அமையப் போகிறது. தொழிலில் புதிய பங்குதாரர்கள் வந்திணைவர். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்குப் பதவி உயர்வு, ஊதிய உயர்வு கிடைக்கும்.




**மேஷ - சுக்கிரன் சஞ்சாரம்**

இதுவரை உச்சம் பெற்று மீனத்தில் சஞ்சரித்து வந்த சுக்கிரன், வைகாசி 10 ஆம் திகதி மேஷ இராசிக்கு செல்கிறார். உங்கள் இராசிக்கு 7, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். 12 இற்கு அதிபதி 6 இல் வரும்போது, "விபரீத இராஜயோகம்" செயற்படும். எனவே திட்டமிடாது செய்யும் காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும். தொட்ட காரியங்கள் வெற்றியாகும் நேரம் இது.

**மகரச் சனியின் வக்கிர காலம்**

வைகாசி 11 ஆம் திகதி மகரத்தில் இருக்கும் சனி பகவான் வக்கிரம் பெறுகிறார். உங்கள் இராசிக்கு 3, 4 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சனி வக்கிரம் பெறும்போது, ஆரோக்கியத் தொல்லை ஏற்பட்டு அகலும். ஆகாரத்தில் கட்டுப்பாடு செலுத்துவது நல்லது. வீடு மாற்றம், இடமாற்றம் அமையலாம். உயர் பதவியில் உள்ளவர்களை அனுசரித்துச் செல்லுங்கள். இதுபோன்ற காலங்களில் குலதெய்வ, இஷ்ட தெய்வ வழிபாடு நன்மை தரும். இம்மாதம் ராஜ அலங்கார முருகனை இல்லத்தில் வைத்து வழிபடுவது நல்லது.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் பணத்தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். பாகப்பிரிவினை சுமுகமாகும். குடும்ப ஒற்றுமை பலப்படும். குரு பார்வை இருப்பதால் கணவன் - மனைவிக்குள் அன்பும், பாசமும் அதிகரிக்கும். அசையாச் சொத்துக்களை வாங்கி மகிழ்வீர்கள். பிள்ளைகளின் வளர்ச்சியால் பெருமை வந்துசேரும். பணியில் கேட்ட சலுகை கிடைக்கும். ஊதிய உயர்வால் மகிழ்ச்சியடைவீர்கள். வாகனம் வாங்கும் யோகம் உண்டு.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா



## குருட்டு யோசனை

பொன்னுசாமி சாப்பிட்டுவிட்டுத் திண்ணையில் உட்கார்ந்து ஏதேதோ இல்லாத யோசனைகள் செய்து கொண்டே இருப்பான். இப்படி ஒருநாள் அவன் இருக்கையில் அவன் முன்பின் அறியாத ஒருவன் அவன் வீட்டிற்கு வந்தான். அவனைப் பார்த்தாலே வெகுதூரத்திலிருந்து சிரமப்பட்டு வந்தவன் போலத் தென்பட்டது.

அவன் பொன்னுசாமியைப் பார்த்து "ஐயா! இதுதானே பொன்னுசாமியின் வீடு?" என்று கேட்டான். பொன்னுசாமியோ சற்று வேடிக்கை பார்க்க விரும்பி "இல்லை, இங்கே பொன்னுசாமி என்று யாருமில்லை. அவன் வீடு இவ்வூர் சிவன் கோவிலின் வடக்கே இருக்கின்றது. அங்கே போய்ப் பார்" என்று கூறினான். அந்த மனிதரும் திகைத்தவாறே "அப்படியா!" என்று கூறியவாறே மெதுவாகச் சென்றான்.

அங்கு போய்விட்டு திரும்பி மறுபடியும் பொன்னுசாமியின் வீட்டிற்கு வந்து "அங்கே விசாரித்ததில் அவர் வீடு இங்கேதான் இருப்பதாகச் சொன்னார்கள். அதனால்தான் திரும்பி வந்தேன். இங்கே எங்கே அவரது வீடு இருக்கிறது? உங்களுக்கு தெரிந்தால் சொல்லுங்கள்" என்று கூறினான்.

பொன்னுசாமியும் "யாராவது ஏதாவது சொல்லிக் கொண்டிருப்பார்கள், இதென்னவோ பொன்னுசாமி வீடல்ல. ஒருவேளை ஏரிக்கரையின் பக்கம் அவன் இருக்கலாம். அங்கே போய் வேண்டுமானால் விசாரித்துப் பார்" என்றான்.

அந்த ஆளும் பொன்னுசாமி கூறிய ஏரிக்கரைக்குப் போய் விசாரித்தான். அங்குள்ளவர்களும் "இங்கே யாரும் அப்படியில்லை, ஊருக்குள் ஒருவர் இருக்கிறார்" என்று கூறி பழையபடி பொன்னுசாமியின் வீட்டிற்கு அனுப்பினார்கள். அந்த ஆள் மறுபடியும் பொன்னுசாமியின் வீட்டிற்கு வந்து நிற்கவே பொன்னுசாமியும் "ஏன் ஏரிக்கரைப் பக்கம் அவன் இல்லையா? நன்றாக விசாரித்தாயா? ஆனால் இது மட்டும் பொன்னுசாமியின் வீடல்ல. நீயாரோ ஏதோ சொன்னார் என்று இங்கே வந்து விட்டாயே. ஒரு வேலை செய். சத்திரத்திற்குப் போய் விசாரி அங்கே யாராவது சொல்வார்கள்" என்று கூறி அனுப்பினான். சத்திரத்தில் போய் விசாரித்து விட்டு அந்த ஆள் மறுபடியும் பொன்னுசாமியின் வீட்டிற்கே வந்தான். அவன் "நான் விசாரித்ததில் அங்கே யாரும் இல்லை என்றும் இங்கே எங்கேயோதான் இருப்பதாகவும் கூறினார்கள்" என்றான். பொன்னுசா மியும் "இதென்ன வேடிக்கை. நீயும் பல இடங்களிற்குப் போய் விசாரித்து விட்டு மறுபடியும் மறுபடியும் இங்கே தான் வருகிறாய். ஆனால் இது மட்டும் பொன்னுசாமியின் வீடல்ல. அவன் தன் பழைய வீட்டிலிருந்து மாறி வேறு வீட்டிற்கு போயிருக்க வேண்டும். அதனால் நீ தெற்கு வீதியில் போய் விசாரித்துப் பார்" என்று கூறி அனுப்பினான்.

(தொடரும்)

# கம்பராமாயணம்

## கிட்கிந்தா காண்டம்




"மயன் என்னும் அசுரத் தச்சனுக்கு இந்நகர் பிரமனால் அளிக்கப்பட்டது. அவன் தேவப் பெண்களுள் ஒருத்தியைக் காதலித்தான். அந்தப் பெண் இந்தச் சுயம்பிரபை என்பவளின் உயிர்த் தோழியாவாள். அந்தத் தெய்வத் தச்சன் தன் காதலியொடு இந்நகருக்கு வந்தான்.

அன்றில் பறவை என இணைந்து இன்பம் அடைந்த காதலர் அங்கேயே நிலைத்து வாழ்ந்தனர். இவளும் அவர்களோடு தங்கி விட்டாள். இந்திரன் அந்தத் தெய்வப் பெண் இருக்குமிடம் தேடி, அங்கு வந்து அந்த அசுரனைக் கொன்று அப்பெண்ணை மீட்டுச் சென்றான். அவர்களுக்குத் துணையாய் இருந்த சுயம்பிரபை என்பவளை அந்நகரத்துக்குக் காவலாய் இருக்கும்படி ஆணையிட்டு இந்திரன் அந்த இடத்தை விட்டு நீங்கினான். விமோசனம் அறியாமல் வேதனையில் உழன்ற அவளுக்கு இராமன் தூதுவராய் அனுமன் முதலிய வானரர் வரும் போது வழி பிறக்கும் என்று இந்திரன் சாப விமோசன் தந்தான்.

சுயம்பிரபை இராமன் தூதுவனாய் அனுமன் வந்தான், என்பதனால் எல்லையற்ற மகிழ்ச்சியை அடைந்தாள், எனினும் அவளும் அங்கிருந்து வெளியேற வழி தெரியாமல் தடுமாறினான். அனைவரும் அனுமன் உதவியை நாடினர். 'அஞ்சற்க' என்று சொன்ன அஞ்சனை மைந்தன் அனுமன், விண்ணுயர வளர்ந்து பேருருவம் கொண்டான்; மேலே திறந்து வெளியே வந்தான்; திருமால் வராக அவதாரம் எடுத்தது போலப் பிலத்தைப் பிளந்து மேலே வந்தான். சுயம்பிரபை விடுதலை பெற்றவளாய் விண்ணுலகம் போய்ச் சேர்ந்தாள். வானவர், அனுமன் அளவற்ற ஆற்றலை வியந்து பாராட்டினார்.

### வழிப் பயணம்

அங்கிருந்து தொலை தூர நடந்து சென்று, குளிர்ந்த பொய்கைக்கரை ஒன்றினை அடைந்தனர். சூரியன் அஸ்தமித்தான். அப் பொய்கையில் குளிர்ந்த நீரைக் கையால் வாரிப் பருகி நீர் வேட்கை தீர்ந்தனர். தேனும் பழமும் அவர்களுக்குத் தெவிட்டாத உணவுகளாயின. பொய்கைக் கரை ஓரம் குளிர்ந்த காற்று வீசியதும் அவர்கள் மெய் மறந்து உறக்கம் கொண்டனர். அந்தப் பொய்கையைக் காத்து வந்த அசுரன், அதற்கு உரிமை கொண்டாடினான்; நீரைக் குடித்த வானரரைத் தாக்க நினைத்தான்; அங்கதன் மார்பில் ஒரு குத்து விட்டான்; அங்கதன் விழித்து எழுந்து பதிலுக்குத் தாக்கி, அந்த அசுரன் உயிரைப் போக்கினான்.

'அவன் யாராக இருக்கக்கூடும்?' என்று யோசித்தனர். கரடிகளுக்குத் தலைவனான சாம்பவான், "வேற் படையைத் தாங்கிய அவ் அசுரன், துமிரன் என்பவன் ஆவான்; அவன் அப் பொய்கைக்கு உரிமை உடையவன்; இவனைப் போல அசுரர் பலர் ஆங்காங்கே இருப்பர்" என்று கூறினான்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்குறுதி கொடுப்பவன்
அதற்கு கடனாளி ஆகிறான்.
– தலாமூத்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நாட்டில் ஒன்றுமே இல்லை என்று சொல்வதற்கா ரணில்?

ரணில் விக்கிரமசிங்க புதிய பிரதமராகப் பதவியேற்றபோது நாட்டின் நெருக்கடி நிலையைத் தீர்க்கவே பிரதமர் பதவியைப் பொறுப்பேற்றுள்ளேன் எனக் கூறியிருந்தார்.

ரணில் விக்கிரமசிங்கவின் மேற்போந்த கருத்துக்கு மதிப்பளித்து மக்களும் தமது போராட்டத்தைத் தணித்துக் கொண்டனர்.

ஆனால் ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பதவியேற்றதால், எந்த முன்னேற்றமும் ஏற்படப் போவதில்லை என்பது நிரூபணமாகி விட்டது.

அமெரிக்க டொலர் எதுவும் கையிருப்பில் இல்லை. அரச ஊழியர்களின் சம்பளத்தை வழங்குவதற்குப் புதிய நாணயத்தாள்களை அச்சிட வேண்டியுள்ளது.

பெற்றோல் தீர்ந்துவிட்டது. எரிவாயு இப்போதைக்கு இல்லை.

அத்தியாவசிய சேவை தவிர்ந்த ஏனைய சேவை உத்தியோகத்தர்கள் தமது பணிமனைக்குச் செல்லத் தேவையில்லை என்பதாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் உரை அமைகிறது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இப்போது சொல்வதையே, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஏலவே சொல்லி வந்தார்.

வலிந்து சென்று பிரதமர் பதவியைத் தனதாக்கிக் கொண்ட ரணில் விக்கிரமசிங்க, அதே பஞ்சத்தைக் கூறுவாராயின், அவர் பிரதமராகப் பதவியேற்றதன் நோக்கம் என்ன? என்பதுதான் நம் கேள்வி.

ஆம், ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பதவியேற்றதால் எரிபொருள் தட்டுப்பாடு நீங்கவில்லை. எரிவாயு வந்துசேரவில்லை, அமெரிக்க டொலர்கள் கிடைக்கவில்லை, நாணய அச்சிடல் நிறுத்தப்படவில்லை.

மாறாக, பிரதமராக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றதால், கோட்டாபய ராஜபக்ஷவின் பதவி காப்பாற்றப்பட்டது.

தலைமறைவாகி இருந்த முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ பாராளுமன்றத்துக்கு வந்துபோக முடிந்தது.

இன்னும் மேலாக, போர் வெற்றிக் கொண்டாட்ட நிகழ்வுகளில் கோட்டாவும் மகிந்தவும் பங்கேற்க முடிந்தது.

ஆக, நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு உடனடித் தீர்வு காண்பது முடியாத காரியமென்றால், ரணில் விக்கிரமசிங்க பிரதமர் பதவியைப் பொறுப்பேற்றிருக்கக்கூடாது.

உண்மையில் அவர் பிரதமர் பதவியைப் பொறுப்பெடுத்து இந்த நாட்டு மக்களுக்குத் துரோகம் இழைத்துவிட்டார் என்றே கூற வேண்டும்.

மிக நேர்த்தியாக – தன்னெழுச்சியுடன் போராட்டம் நடத்தி இலங்கையின் ஆட்சிப் பீடத்தை தூய்மைப்படுத்துகின்ற மக்களின் பலத்தை முறியடித்து அதனை நீத்துப் போகச் செய்ததன் மூலம் ரணில் விக்கிரமசிங்க மிகப்பெரும் பழியைச் சுமந்து கொண்டார்.

ஆம், கடலில் மூழ்கிக் கொண்டிருக்கக் கூடிய கப்பலின் கப்டன் பதவியைப் பொறுப்பெடுத்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, தன்னால் நாட்டின் பொருளாதார நெருக்கடியை நிவர்த்திக்க முடியாதெனில், அவர் உடனடியாகப் பதவி விலக வேண்டும்.

இதுவே அவர் இந்த நாட்டு மக்களுக்குச் செய்கின்ற பேருதவியாக இருக்கும்.

## க.பொ.த சா/த பரீட்சை காலப் பகுதியில் தடையின்றி மின்சாரத்தை விநியோகிக்க நடவடிக்கை

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை இடம்பெறும் காலப் பகுதியிலும் குறித்த காலத்தில் மாலை 6.30இற்கு பின்னரும் தடையின்றி மின்சாரத்தை விநியோகிக்க பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

பரீட்சார்த்திகளின் நலன்கருதி இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அந்த ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, எதிர்வரும் '22ஆம் திகதி முதல் எதிர்வரும் முதலாம் திகதி வரையான காலப்பகுதிக்குள், பரீட்சை இடம்பெறும் காலத்திலும் மாலை 6 மணியின் பின்னரும் மின் தடையை அமுலாக்க வேண்டாம் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு மின்சார சபையை அறிவுறுத்தியுள்ளது.

இதற்கு அவசியமான எரிபொருள் மற்றும் நீர் உள்ளிட்ட வளங்களை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு, சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்களுக்கு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு ஆலோசனை வழங்கியுள்ளது.

இதேநேரம், எதிர்வரும் 21ஆம், 22ஆம் மற்றும் 29ஆம் திகதிகளில் மாலை 6 மணியின் பின்னர் தடையின்றி மின்சாரத்தை விநியோகிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 23 ஆம் திகதி முதல் ஜூன் மாதம் முதலாம் திகதிவரை கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைகள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## வற்றாப்பளை பொங்கல்; முன்னாயத்த கலந்துரையாடல்

(பனிக்கன்குளம்)

வரலாற்றுச் சிறப்புமிக்க வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் தொடர்பிலான முன்னாயத்த கலந்துரையாடல் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் மாவட்ட செயலாளர் க.விமலநாதன் தலைமையில் இடம்பெற்றது.

பொங்கல் நிகழ்வுகள் எதிர்வரும் 30ஆம் திகதி பாக்குத்தெண்டலுடன் ஆரம்பமாகி 6.6.2022 அன்று தீர்த்தம் எடுத்தல் நிகழ்வும் அதனைத் தொடர்ந்து 12.6.2022 அன்று காட்டா விநாயகர் ஆலயத்தில் பொங்கல் நிகழ்வுகள் இடம்பெற்று 13.6.2022 அன்று காலை காட்டா விநாயகர் ஆலயத்திலிருந்து பண்டம் எடுத்து வரப்பட்டு வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தினுடைய பொங்கல் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

கடந்த 2019ஆம் ஆண்டு ஏப்ரல் குண்டு தாக்குதல் காரணமாகவும் 2020 ஆம் 2021 ஆம் ஆண்டுகளில் கொரோனா காரணமாகவும் ஆலய உற்சவம் மட்டுப்படுத்தப்பட்ட பக்தர்களுடன் இடம்பெற்ற நிலையில் இவ்வாண்டு பல்லாயிரக்கணக்கான மக்கள் இந்த உற்சவத்தில் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (4.281)

## விவசாயிகளுக்கு இரசாயன உரமூடையை 10 ஆயிரத்திற்கு வழங்க தீர்மானம்

(கொழும்பு)

விவசாயிகளுக்கு ஒரு இரசாயன உரமூடையை 10 ஆயிரம் ரூபாய்க்கு வழங்க பிரதமரினால் நியமிக்கப்பட்ட குழு தீர்மானித்துள்ளது.

இந்திய கடன் திட்டத்தின் கீழ் 65,000 மெற்றிக் தொன் உரத்தை இம்மாத இறுதிக்குள் இறக்குமதி செய்ய உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அந்தக் குழு குறிப்பிட்டுள்ளது.

நாட்டில் 2022 ஆம் ஆண்டின் சிறுபோக பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதனை தடையின்றி முன்னெடுத்துச் செல்ல அவசியமான எரிபொருள் தொகையினை விவசாயிகளுக்கு வழங்க அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் கே.டி.எச்.ருவான்சந்திர தீர்மானித்துள்ளார். (நி-6)

## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### எல்லா விடைகளின் இலக்கு

மௌனத்தால் மட்டுமே சில கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியும். எல்லா விடைகளின் இலக்கும் மௌனம்தான். மனத்தை மோனப்படுத்தாத எந்த விடையும் விடையே அல்ல.

எண்ணங்கள் தாமாகவே இலக்கு ஆவதில்லை. மௌனம் தான் அவற்றின் இலக்கு. "நான் யார்?" என்ற கேள்வியைக் கேட்கும்போது உங்களுக்கு ஒரு பதிலும் கிடைப்பதில்லை; மௌனம்தான் அங்கு நிலவுகின்றது. அதுதான் உண்மையான பதில். காரணம், உங்கள் ஆன்மா ஒரு இறுகிய மௌனம்; இந்த இறுகிய மௌனம் தான் விவேகம், ஞானம்.

## கச்சதீவை குத்தகைக்கு விட திரைமறைவில் முயற்சி

### மன்னார் மீனவர்கள் குற்றச்சாட்டு

(மன்னார்)

இலங்கை வடபகுதி மீனவர்களுக்கு சொந்தமான கச்சதீவு கடல் பிராந்தியத்தை இலங்கையின் பொருளாதார நெருக்கடியை பயன்படுத்தி இந்தியாவிற்கு நீண்ட கால குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு திரைமறைவில் முயற்சிகள் நடைபெற்று வருவதாக மன்னார் மாவட்ட மீனவர் கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தினர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர்கள் குறித்த குற்றச்சாட்டை முன்வைத்தனர்.

இந்த விடயம் தொடர்பாக மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவு சங்க சமாசத்தின் செயலாளர் என்.எம். ஆலம் கருத்து தெரிவிக்கையில்,

கச்சதீவு பகுதி இந்தியாவிற்கு நீண்ட கால குத்தகை அடிப்படையில் வழங்கப்பட இருப்பதாக பரவலாக மன்னார் மாவட்ட மீனவர்கள் மூலமாகவும் அறியக்கூடியதாக இருக்கிறது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவரோடு இணைந்து செயற்படுகின்ற பாராளுமன்ற உறுப்பினர்களும் குறிப்பாக வடபகுதியை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களும் இந்த கச்சதீவு விடயத்தில் அதிக கரிசனை எடுத்து இது இலங்கைக்கு சொந்தமானது என்பதை வலியுறுத்தி இலங்கை பொருளாதாரத்திற்கு எமது இறைமையை விட்டுக் கொடுக்காமல் பாதுகாக்க வேண்டும். இவ்வாறு பொருளாதார நிலையை கருத்தில் கொண்டு ஒவ்வொரு தீவுகளையும் விற்கும் நடவடிக்கையில் இறங்கினால் அதனைவிட நாங்கள் மடிந்துபோவது மேல் என்பதை இங்கு நான் பதிவு செய்து கொள்கிறேன் என மேலும் தெரிவித்தார். (4.6.285)

## இந்து சமய தத்துவங்கள் ஐந்நூறு

வசதியில்லாத காரணத்தால் புதுமணத் தம்பதிகள் சுவாமிகள் நிறைந்த படங்கள் உள்ள அறையில் முதலிரவைக் கழிக்க நேரிடும். இது பாவமல்ல. கணவனும் மனைவியும் வாழ்வது பிழையன்று. 'இல்லறம் அல்லது நல்லறம் அன்று' என்கிறார் ஔவையார். புதுமணத் தம்பதிகள் வாழ்கின்ற ஒரேயொரு தனிய றையில் இறைவனுடைய படம் இருப்பது பிழையன்று.

அது நல்லதுங்கூட. காதல் என்பது புனிதமானதுதான். நதி புனிதமானது பயிர்களுக்கும் உயிர்களுக்கும் பயன்படுவது ஆனால் அந்த நதி கரையை உடைக்குமானால் பயிர்களும் உயிர்களும் நாசமாகும். இதுபோல் காதல் கரை கடவாமல் இருக்க வேண்டும். ஆன்றோர்கள் தான் அந்தக்கரை. இளமையில் மனதில் தெளிவு இருக்காது. தெளிந்த அறிவுள்ள தந்தையின் அனுபவ ஆலோசனையைக் கேட்டு நடப்பதுவே சிறந்த வாழ்வைத் தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலப்பு தேர்தல் முறையில் மாகாண சபைத் தேர்தலுக்கான எல்லை நிர்ணய அறிக்கை-ஒரு பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 69

அட்டவணை 5.1: பால்நிலைக்கு ஏற்ப சனத்தொகைப் பரம்பல் - சப்பிரகமுவ மாகாணம்

| பிரதேசம் | மொத்த சனத்தொகை | ஆண் | | பெண் | |
|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| இரத்தினபுரி | 1,088,007 | 536,401 | 49.3 | 551,606 | 50.7 |
| கேகாலை | 840,648 | 400,820 | 47.7 | 439,828 | 52.3 |
| சப்பிரகமுவ | 1,928,655 | 937,221 | 48.6 | 991,434 | 51.4 |
| இலங்கை | 20,359,439 | 9,856,634 | 48.4 | 10,502,805 | 51.6 |

### சப்ரகமுவ மாகாணம் சமய அடிப்படையில் சனத்தொகை வேறுபாடு-2012

சமய அடிப்படையில் சனத்தொகை வேறுபாடு அட்டவணை 5.4 இல் காட்டப்பட்டுள்ளது. சப்ரகமுவ மாகாணத்தின் சனத்தொகையில் கூடிய எண்ணிக்கையானோர் பௌத்தர்களாகும். அதாவது (85.8%) ஆகும். அதற்கு அடுத்ததாக இந்துக்கள் (8.1%) உம் இஸ்லாமியர்கள் (4.4%) உம் உரோமன் கத்தோலிக்கர்கள் மற்றும் ஏனைய சமயத்தினர் (1.7%) ஆகும். இலங்கையின் பௌத்தர்களின் சனத்தெகையில் 11.6% சப்ரகமுவ மாகாணத்தில் வசிக்கின்றனர். அதற்கு இணைவாக இந்து மற்றும் இஸ்லாம் மதத்தைப் பின்பற்றுபவர்களின் எண்ணிக்கை முறையே 5.3% மற்றும் 4.4% ஆகும்.

அட்டவணை 5.2: பிரிவுகளுக்கு அமைய சனத்தொகை வேறுபாடு – சப்பிரகமுவ மாகாணம்

| பிரதேசம் | மொத்த சனத்தொகை | நகர | | கிராமிய | | தோட்ட | |
|---|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| இரத்தினபுரி | 1,088,007 | 99,451 | 9.1 | 888,845 | 81.7 | 99,711 | 9.2 |
| கேகாலை | 840,648 | 15,993 | 1.9 | 767,469 | 91.3 | 57,186 | 6.8 |
| சப்பிரகமுவ | 1,928,655 | 115,444 | 6.0 | 1,656,341 | 85.9 | 156,897 | 8.1 |
| இலங்கை | 20,359,439 | 3,704,470 | 18.2 | 15,753,322 | 77.4 | 901,647 | 4.4 |

### சப்ரகமுவ மாகாணம் நிர்வாக, உள்ளூராட்சி மற்றும் தேர்தல் அதிகாரப் பிரதேசங்கள்

நிர்வாக மற்றும் உள்ளூராட்சிக்கு ஏற்புடைய சப்ரகமுவ மாகாணத்தின் கட்டமைப்பு அட்டவணை 5.5 இல் காட்டப்பட்டுள்ளது.

### சப்ரகமுவ மாகாணம் சனத்தொகை பிரிவுகள் அடிப்படையில் வேறுபட்டுள்ள விதம்-2012

சனத்தொகை பிரிவுகள் அடிப்படையில் வேறுபட்டுள்ள விதம் அட்டவணை 5.2 இல் தரப்பட்டுள்ளது. சப்ரகமுவ மாகாணத்தில் விசேடமாக கேகாலை மாவட்டத்தில் அதிகமான மக்கள் தொகையினர் கிராமப் புறங்களில் வசிக்கின்றனர்.

இரத்தினபுரி மாவட்டத்தில் நகர்ப்புற சனத்தொகை 9.1% இருப்பதோடு அது கேகாலை மாவட்டத்தை விட மிகவும் கூட. கேகாலை மாவட்டத்தில் நகர்ப்புற சனத்தொகை 1.9% ஆகும்.

### சப்ரகமுவ மாகாணம் இனங்கள் அடிப்படையில் சனத்தொகை மாற்றம் -2012

சப்ரகமுவ மாகாணத்தின் சனத்தொகை இன ரீதியில் ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு ஏற்ற விதத்தில் அட்டவணை 5.3 குறிப்பிடப்பட்டுள்ளது. சப்ரகமுவ மாகாண சனத்தொகையின் பெரும்பான்மையினராக சிங்களவர்கள் (86.4%) வசிக்கின்றனர்.

இரண்டாவதாக தமிழர்கள் (9.2%). அதற்கு அடுத்ததாக இலங்கை முஸ்லிம்கள் (4.3%). மற்றைய இனத்தவர்களான பேர்கர், மலே, இலங்கைச் செட்டி மற்றும் பாரத மக்கள் 0.1% வசிக்கின்றனர்.

இலங்கையில் உள்ள சிங்களவர்கள் சனத்தொகையில் 10.9% சப்ரகமுவ மாகாணத்தில் வசிக்கின்றனர். தமிழர்கள் தொகையில் (இலங்கைத் தமிழர்கள் மற்றும் இந்தியத் தமிழர்கள்) 5.7 % முஸ்லிம்கள் தொகையில் 4.4% சப்ரகமுவ மாகாணத்தில் வசிக்கின்றனர்.

அட்டவணை 5.3: இனங்கள் அடிப்படையில் சனத்தொகை வேறுபாட்டு வீதம் - சப்பிரகமுவ மாகாணம்

| பிரதேசம் | சிங்களவர் | இலங்கைத் தமிழர் | இந்தியத் தமிழர் | இலங்கை முஸ்லிம் | ஏனைய |
|---|---|---|---|---|---|
| இரத்தினபுரி | 87.1 | 5.0 | 5.7 | 2.1 | 0.1 |
| கேகாலை | 85.5 | 2.1 | 5.2 | 7.1 | 0.1 |
| சப்பிரகமுவ | 86.4 | 3.7 | 5.5 | 4.3 | 0.1 |
| இலங்கை | 74.9 | 11.2 | 4.1 | 9.3 | 0.5 |

அட்டவணை 5.4: சமயங்கள் அடிப்படையில் சனத்தொகை வீத பரம்பல் - சப்பிரகமுவ மாகாணம்

| பிரதேசம் | பௌத்தம் | இந்து | இஸ்லாம் | கத்தோலிக்கம் | வேறு |
|---|---|---|---|---|---|
| இரத்தினபுரி | 86.7 | 9.4 | 2.2 | 1.0 | 0.7 |
| கேகாலை | 84.4 | 6.5 | 7.3 | 1.0 | 0.8 |
| சப்பிரகமுவ | 85.8 | 8.1 | 4.4 | 1.0 | 0.7 |
| இலங்கை | 70.1 | 12.6 | 9.7 | 6.2 | 1.4 |

அட்டவணை 5.5: நிர்வாக மற்றும் உள்ளூராட்சி கட்டமைப்பு – சப்பிரகமுவ மாகாணம்

| பிரதேசம் | பிரதேச செயலகப் பிரிவுகள் | கிராம அலுவலர் பிரிவுகள் | மாநகர சபைகள் | நகர சபைகள் | பிரதேச சபைகள் |
|---|---|---|---|---|---|
| இரத்தினபுரி | 17 | 575 | 1 | 2 | 14 |
| கேகாலை | 11 | 573 | - | 1 | 11 |
| சப்பிரகமுவ | 28 | 1148 | 1 | 3 | 25 |
| இலங்கை | 331 | 14,021 | 24 | 41 | 276 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடரும்...)

## பாணின்...

யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் செயலாளர் கார்த்திகேசு பாஸ்கரன் தெரிவித்துள்ளார்.

பிறிமா மாவின் விலை ஒரு கிலோ விற்கு 40 ரூபாயால் அதிகரிக்கப்படுள் ளதால் கொழும்பில் பாணின் விலை அதிகரிக்கப்பட்டுளளது.

இதனால் 450 கிராம் பாணின் புதிய விலை 30 ரூபாயால் அதிகரித்தாகவும் தெரியவந்துள்ளது.

இதன்படி யாழ். மாவட்டத்திலும் பாணின் விலை 20 ரூபாயால் அதிகரிக் கப்பட்டு 170 ரூபாயாகவும் மற்றும் பணிஸ் வகைகளின் விலையில் மாற்றம் ஏற்ப டாது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-7,18,33)

## யாழில்...

யாழ்ப்பாண நகரிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருளுக்காக மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந் தமையை அவதானிக்க முடிந்தது.

எரிபொருளுக்காக நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டாம் என அரசாங்கம் அறிவித்திருந்தபோதிலும் நேற்றுக் காலை முதல் எரிபொருட்களை பெற்றுக்கொள் வதற்காக மக்கள் கொள்கலன்களுடன் காத்திருந்தனர். (ம-7,18,33)

## புலோலி...

நேற்று வியாழக்கிழமை மாலை புலோலி - கச்சாய் பிரதான வீதியில் உள்ள வட வரணிப் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் துன்னாலையைச் சேர்ந்த அருந்தவராஜா அஜந்தன் (வயது - 30) என்ற இளம் குடும்பஸ்தரே பலி யானவராவார்.

உயிரிழந்தவரின் சடலம் மரண விசா ரணைக்காகவும் பிரேத பரிசோதனைக் காகவும் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ம-7,18,33,60)

## குடும்பஸ்தர்...

அதிகாலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அதே இடத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான ஐயாத்துரை துரைரட்ணசிங்கம் (வயது-65) என் பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த குடும்பஸ்தர் நீண்ட காலமாக தனிமையில் வாழ்ந்து வந்த நிலையில் தூக்கிட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட் டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசா ரணைகளை நட்டாங்கண்டல் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ம-7,281,315)

## பவித்ரா...

றப்புனாய்வு பிரிவில் ஆஜராகி வாக்கு மூலம் வழங்கியுள்ளனர்.

கடந்த 9 ஆம் திகதி ஆர்ப்பாட்டக்காரர் கள் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் குறித்த நபர்களிடம் வாக்கு மூலம் பெறப்பட்டதாக தெரிவிக்கப்படு கின்றது. (ம-7)

## அத்தியாவசிய...

பாராளுமன்றில் நேற்று உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தற்போதைய கடுமையான எரிபொ ருள் தட்டுப்பாடு மற்றும் போக்குவரத்து சிரமங்களைக் கருத்திற்கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக பிரதமர் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

மேலும் பொது மக்கள் அத்தியாவசிய மற்ற பயணங்களை தவிர்க்குமாறும் பிரதமர் கேட்டுக்கொண்டார்.

மேலும் அத்தியாவசிய சேவைகளை மேற்கொள்ள வேண்டிய உத்தியோகத் தர்களைத் தவிர ஏனைய அரச உத்தியோ கத்தர்கள் இன்று பணிக்கு வருவது அவசியமில்லை என அறிவிக்கப்பட் டுள்ளது.

பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரினால் வெளியி டப்பட்டுள்ள சுற்றுநிருபத்திலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## சபைக்கு...

மசிங்க அறிவித்துள்ளார்.

எரிவாயுக் கப்பல் துறைமுகத்துக்கு வந்துள்ள நிலையில் நேற்று முன்தினம் இரவு வரையில் பாரவூர்திகள் மூலம் அவை விநியோகிக்கப்படவில்லை.

எனவே அதிகாரிகளின் தாமதம் குறி த்து விசாரணை செய்யவேண்டியுள்ளது என்று பிரதமர் குறிப்பிட்டார்.

என்வே கோப் குழுவின் தலைவர் இது தொடர்பில் எரிவாயு நிறுவன அதிகாரி களை அழைத்து கருத்துக்களை அறிய வேண்டும் என்று ரணில் குறிப்பிட்டார். (ம-7)

## பாடசாலை...

விடுமுறை இன்றைய தினம் வழங்கப் படவுள்ளதாக கல்வி அமைச்சு முன்னதாக தெரிவித்திருந்தது.

இந்நிலையில், முதலாம் தவணை விடுமுறை நேற்று முதல் ஆரம்பமாவதாக கல்வி அமைச்சு அறிவித்துள் ளது.

இதேவேளை, இரண்டாம் தவணை கற்றல் செயற்பாடுகளுக்காக பாடசாலைகள் எதிர்வரும் ஜூன் மாதம் 6ஆம் திகதி மீள திறக்கப்படவுள்ளன. (ம-7)

## யுத்தத்தில்...

வித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றிய அவர்,

இன்று (நேற்று) வெற்றி தினம் கொண்டாடப்படுகின்ற நிலையில், அந்த போரில் பலியான படையினருக்கு தாம் மரியாதை செலுத்துவதாக குறிப்பிட்டார்.

அதேநேரம், தவறான வழியில் சென் றாலும் பிரபாகரனின்கீழ் செயற்பட்டு மரணித்த அந்த இளைஞர்களுக்கும் மரியாதை செலுத்துவதாகவும் தெரிவித் தார்.

இதேவேளை அரசியல் வாழ்க்கை யில் தான் அதிகமாக விமர்சித்த ரணில் விக்கிரமசிங்க, இன்று பிரதமராக பதவி யேற்றமை குறித்து மகிழ்ச்சியடைவதாக வும் தெரிவித்தார்.

அவர் சர்வதேசத்தில் நற்பெயரைக் கொண்டிருக்கிறார். பாராளுமன்றத்தின் 225 பேர் செய்ய முடியாத காரியமான சர்வதேச செல்வாக்கை அவர் பெற்றிருக் கிறார். எனவே அவருக்கு பாராளுமன் றில் அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

இதேவேளை நாட்டில் இன்று சர்வ கட்சி அரசாங்கம் அமைக்கப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். நாட்டில் இன்று பொதுமக்கள் உணவுக்காக கஸ்ரப்படும் நிலையில் பாராளுமன்றத்தில் உணவகம் செயற்படுவது பொருத்தமானது அல்ல.

எனவே அந்த உணவகத்தை மூடி விடுமாறும் அவர் கோரிக்கை விடுத்தார்.

நாட்டில் அண் மையில் இடம் பெற்ற வன்முறை களுக்கு முன்னாள் பிரதமர் மகிந்த ராஜ பக்ஷவும் பொறுப் புக்கூற வேண்டும் என்றும் டிலான் பெரேரா குறிப்பிட் டார். (ம-7)

## கோட்...

அனைத்துப் பல் கலைக்கழக மாண வர்களால் கொழு ம்பில் நேற்று நடத் தப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணி மீது பொலி ஸார் கண்ணீர்ப் புகை மற்றும் நீர்த் தாரைத் தாக்கு தலை நடத்தியுள் ளனர்.

இ த னா ல் கொழும்பில் நேற்று பதற்றமான நிலை மை ஏற்பட்டது.

கோட்டா - ரணிலின் சூழ்ச்சி அர சை விரட்டியடிப் போம் என்றதொனிப் பொருளில் அனை த்துப் பல்கலைக் கழக மாணவர்க ளால் விகாரமஹா தேவி பூங்காவுக்கு அருகில் இருந்து காலிமுகத் திடல் நோக்கிப் பேரணி நடத்தப்பட்டது.

இதன்போது அங்கு வீதித் தடை களை போட்டிருந்த பொலிஸார், மாணவர்கள் மீது நீர்த்தாரை மற்றும் கண்ணீர்ப்புகைத் தாக்குதலை நடத்தி மாணவர்களை விரட்டியடிக்க முயற்சித்தனர்.

எனினும், தொடர்ந்தும் மாணவர்கள் அந்தப் பகுதியில் போராட்டத்தில் ஈடுபட் டதால் அங்கு பதற்றமான நிலைமை ஏற்பட்டிருந்தது. (ம-7)

## யாழில் மண்...

மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்தார்.

தற்பொழுது யாழ். மாவட்டத்தில் உள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் எரி பொருள் பெறுவதில் உள்ள சிரம நிலை தொடர்பில் நேற்று யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த மாதங்களைவிட அதிக அளவிலான மண் ணெண்ணெய் எம்மால் தருவிக் கப்படுகின்ற போதிலும் தற்போது உள்ள இடர்நிலையில் யாழ்ப்பாண மாவட்டத் தில் மண்ணெண்ணெய் தட்டுப்பாடு நிலவுகிறது.

கடந்த வாரத்தில் இருந்து யாழ்ப்பாண மாவட்டத்திற்கு மண்ணெண்ணை விநியோ கம் இடம்பெறவில்லை எனவும் மற்றும் பெருமளவில் பொதுமக்கள் மண்ணெண் ணெயினை கொள்வனவு செய்வதன் காரணமாகவும் தற்போது மண்ணெண் ணெய் பற்றாக்குறை நிலவுகின்றது என்றார். (ம-7,33)


மெகா பவர்
திகதி 12/05/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1108
N 25 14 23 41 56

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.05.12
சீட்டிழுப்பு இலக்கம் 069
இடம் 12 25 38 54 இடம்

மஹஜன சம்பத
திகதி 2022/05/12
சீட்டிழுப்பு இலக்கம் 4760
K 5 8 3 6 1 2

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 12.05.2022
சீட்டிழுப்பு இலக்கம் 3002
P 19 47 51 67

தன நிதானய
திகதி - 2022.05.12
சீட்டிழுப்பு இலக்கம் - 790
G 36 57 67 74
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

அத கோடிபதி
வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1563
சீட்டிழுப்பு திகதி: 2022.05.12
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,823,820/-
37 44 65 68 F

சனிதா
வியாழக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.05.12
சீட்டிழுப்பு இல: 3598
ரூ. 4,651,360/-
23 42 44 73 N

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 4,771,533/-
திகதி 2022-05-12
வெற்றி வாரம் 3449
07 18 22 28
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 8,242,360/-

12
சீட்டிழுப்பு வாரம் 913
2022.05.12 வியாழக்கிழமை
J 24 18 19 69 74
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 237,107,941/-

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1737 நிறம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2022.05.12 தினம் வியாழக்கிழமை
T 01 45 67 75
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 2,646,160/-


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கைதடி சந்திக்கு அருகாமையில்**
**33 பரப்புக் காணி விற்பனைக்கு**

**நிலப்பரப்பு**

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் (நிலப்பரப்பு)
- கைதடி சித்த போதனா வைத்தியசாலை, யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவபீடம் கிழக்கு எல்லைகள்.
- சமுர்த்தி வங்கி வடக்கு எல்லைகள்.
- கைதடி சந்தி 200 மீற்றர் தூரம்.
- வட மாகாண சபை 250 மீற்றர் தூரம்.
- மூன்று வழிப்பாதையுடன்

01. A9 வீதி 100 மீற்றர் தூரம். (16 அடிப் பாதையுடன்)
02. கைதடி கோப்பாய் வீதி 50 மீற்றர் தூரம் (20 அடிப் பாதையுடன்)
03. சமுர்த்தி வங்கி அருகாமை வீதி 100 மீற்றர் தூரம். (16 அடிப் பாதையுடன்)

- சுற்றி நல்ல சூழலுடன் நல்ல தண்ணீர் நிலம்.
- செம்மண் காணி.




(11417)

**பார்வையிடும் நேரம்**
காலை 8 மணி முதல் மாலை 6 மணிவரை

தொடர்பு
**077 623 4204, 077 288 0152, 076 658 3621**



## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 24.04.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

*அமரர்*

## இராசரத்தினம் பஞ்சலிங்கம்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 21.05.2022 சனிக்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் எதிர்வரும் 23.05.2022 திங்கட்கிழமை பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

இராஜபாதை வீதி,
கோப்பாய். (11446) குடும்பத்தினர்


## யாழில் கடும் காற்று

# 10 பேர் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழில் நேற்று வீசிய காற்று காரணமாக 3 குடும்பங்களைச் சேர்ந்த 10 பேர் பாதிக்கப்பட்டதோடு ஒருவர் உயிரிழந்துள்ளதாக யாழ்.மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் என். சூரியராஜ் தெரிவித்தார்.

யாழில் வீசிய கடும் காற்றினால் கோப்பாய், நல்லூர், காரைநகர் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த குடும்பங்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளன.

அதன்படி, கோப்பாய் ஜே/286 கிராம சேவையாளர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த மூவர், நல்லூர் ஜே/97 கிராம சேவையாளர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த இருவர் பாதிக்கப்பட்டதுடன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.(டி-7.33)


## வேலை வாய்ப்புகள்

Office Admin, Accounts Assistant, Store Keeper, Supervisor, Receptionist, Cash Collector, Cashier, கிளார்க். பக்கிங், வயறிங், விற்பனையாளர்கள்.

**Interview : 21.05.2022 1.30 - 4.00pm** (11437)

**DEWMAS, No.51, Amman Road, Nallur.**
**077 773 3368, 074 138 3368**

**சார்தாம் யாத்திரை**
**பத்திரி, கேதார் யாத்திரை**

நாட்கள் : 12 ஆரம்பம் : 20.06.2022

செல்லுமிடங்கள் :
பத்திரிநாத், கேதார்நாத், கங்கோத்திரி, ஜமுனோத்திரி, ஹரித்துவர், ரிஷிகேஸ், சென்னை
விபரங்களை கேட்டறிந்து பதிவு செய்க

**S.ராஜன்** கைபேசி : **077 736 2154** (4341)

# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் நாவற்குழி சந்தியில் 22 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. ( நிலப்பரப்பு )**

- A32, A9 இணையும் பிரதான வீதியில் ( றவுண்டப் வோட் )
- A9 வீதியுடன் 6 பரப்பும்
- A9 பிரதான வீதியில் இருந்து 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 1 ½ பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையிலும் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
- திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் மருந்தகங்கள் அமைப்பதற்கும் ( பார்மசி )
- அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.

(11443)

**தரகர் தேவையில்லை**

**பார்வையிடும் நேரம்**
காலை 6 மணி முதல் மாலை 6 மணிவரை

**077 814 7389, 077 241 7589 - ஜெயம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.05.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.